சகாதேவர் அருளிய

# சோதிட நாடி

[ துவாதச பாவகம் ]

உ
ஸ்ரீ ராமஜெயம்
ஸ்ரீ ஷன்முக விலாஸ் ஜோதி சாலை,
M. S. வெங்கடசுப்ரமண்ய ஜோஸ்யர்.
மன்னார்குடி.

சிறுமணவூர்
முனிசாமி முதலியார் அவர்களால்
பார்வையிடப்பட்டது.

B. R. அரங்கசாமி நாயகர்
பதிப்பாளர் :: சென்னை

[பதிப்புரிமை] 1941 [விலை அணா 4

T-12068

உ

சகாதேவர் அருளிய

# சோதிட நாடி

[ துவாதச பாவகம் ]

Saraswathi Thunai.
Navagraha Sahayam.
Shanmuga Vilas.
S.Venkatasubramania
Josiar.
S/O M.P.S.Swaminatha
MANNARGUDI.
Book No

சிறுமணவூர்

முனிசாமி முதலியார் அவர்களால்

பார்வையிடப்

T012068
Sarasvati Mahal Library.Thanjavur

B. R. அரங்கசாமி நாயகர்

பதிப்பாளர் :: சென்னை

பதிப்புரிமை] 1941 [விலை அணா 4

சகாதேவர் அருளிச்செய்த

# சோதிடநாடி

## துவாதச பாவகம்.

### காப்பு.

கோணவமிராசிக் கொண்டினியநூலெளிதிற்
றோணநிலைநாடிச் சோதிடத்தை—யூணுதற்கு
நல்லானைமுகனை நிதம் நாவினாற்போற்றவே
கல்லானைக் காப்புக் கவி.

### அவையடக்கம்.

சோதிடத்தினாடியினைச் சொல்லவேவல்லோர்முன்
கோதிடத்திவொன்றைக் குறைகூறார்—தீதிடத்தே
மன்னித்தருள்வர் வாணர்மதலைமொழி
தன்னிற் றடையின்றித் தான்.

---

### 1-வது பாவகம்.

## இலக்கினஸ்தான பலன்.

### நெருப்பு, கடகத்தால் மரணம்.

கதிரவனுமேழிற் காரிவுயிர்தன்னில்
ததியுடையசேயவனுந் தானான்கில்—அதிவிதமாய்
நின்றால்நெருப்பினிலும் நெடியகடகத்தாலும்
குன்றாமற் சாவான் குறி.

(இதன் பொருள்.) இவ்வுலகின்கண் ஒவ்வொருவரது ஜன்ம ராசியாகிய இலக்கணஸ்தானத்தில் சனியும், ஏழாமிடத்தில் சூரியனும், நான்காமிடத்தில் அங்காரகனும் வீற்றிருக்கப் பிறந்தவர் அக்கினி விபத்தினாலும், ஆயுத முதலிய கத்திவர்க்கங்களாலும் மரணமடைந்து உயிர்ச்சேதப்படுவர், என்றவாறு. 1

## நஞ்சால் மரணம்.

ஆடுதேளிலக்கினமா யாறெட்டிற்பாவர்களுங்
கூடியேநின்றாற் குறைவாகி—தேடிவரும்
மஞ்சாயமானே மதிமுகத்தாயவனுயிரும்
நஞ்சாலேபோமே நவில்.

(இ - ள்.) மேஷம் அல்லது விருச்சிகமாகிய இராசிகளி லொன்று இலக்கினமாயிருக்க அவ்விலக்கினத்திற்கு ஆறாமிடம் அல்லது எட்டாமிடமாகிய இராசிகளில், பாபக்கிரகங்கள் சூழ்ந்து கூடிநிற்கப் பிறந்தவர் விஷகாலிகளால் மரணமடைந்து உயிர்விடுவர், எ - று. 2

## நித்திரையில் மரணம்.

நன்மைமதியுயிரில் நாலிற்கரியவனும்
வன்மையுளவெட்டில் வளர்சுடரும்—பொன்வியத்தில்
நின்றாரேயாகில் நித்திரையிற்றான்பிசகி
பொன்றாவி போகும் புகல்.

(இ - ள்.) இலக்கினத்தில் சந்திரனும், நான்காமிடத்தில் சனியும், எட்டாமிடத்தில் சூரியனும், பனிரண்டாமிடத்தில் குருவுமிருக்கப் பிறந்தவர் நித்திரையில் மேலிருந்து கீழே தவறி விழுந்தாவது அல்லது தற்செயலாயாவது மரணதிசையை யடைவர், எ - று. 3

## 1-வது பாவகம் முற்றிற்று.

---

## 2-வது பாவகம்.

# வாக்குஸ்தான பலன்.

### பிரசண்ட வித்துவான்.

பானுவிற்குப்பனிரெண்டிற் பார்மகனுமந்திரியுந்
தானிருக்கின்மண்விண்ணுந் தான்புகழ—மானேகேள்
நாவலர்கள்போற்ற நாடும்பிரசண்டவித்தை
மேவுமெனச் சேர விளம்பு.

(இ-ள்.) சூரியனிருக்கும் ஸ்தானத்திற்குப் பனிரண்டாமிடத்தில் அங்காரகனும் குருவும் கூடிநிற்கப் பிறந்தவர் உலகமெங்கும் புகழும்படியான வித்துவானுவன் அல்லது இரண்டு பாஷைகளுக் கதிபதியா யிருப்பதன்றி, அதிக கீர்த்திமானுகவு மிருப்பர், எ-று. 4

### விஷ வித்தை பரிகாரி.

வேல்பொருதுங்கண்ணுய் மிகவைந்திலிராகுவுமாய்
பாலுயரச்சுக்கிரனும் பாய்ந்திருக்கில்—நாலுபத்திற்
குடையவனுமிராகுங் கொடிவெள்ளிக்கூடிடிலே
விடைசேர் விஷவித்தை மேல்.

(இ-ள்.) ஐந்தாமிடத்தில் இராகுவும், சுக்கிரனுங்கூடி நின்றாலும், ரிஷப ராசியில் அல்லது நான்காமிடத்ததிபனும், பத்தாமிடத்ததிபனும், இராகுவும் சுக்கிரனுங்கூடி நிற்கப் பிறந்தவர் விஷ வித்தைப் பரிகாரத்திற் சிறந்தவராய் மூலிகைகளும் அவிழ்தங்களும் பிரயோகிக்கும் வல்லவராவர், எ-று. 5

### நிந்தை, பொய்யன்.

உயிரிற்குநான்கைந்தி லொன்றுகமேயமேனும்
பயிரிற்கிருநான்கோன் பதுபத்தில்—குயின்மொழியே
ஏழுகிரக மியல்பாகத்தானிருக்கின்
சூழுநிந்தை பொய்யனெனச் சொல்.

(இ - ள்.) இலக்கினத்திற்கு நான்காமிடம் ஐந்தாமிடம் எழாமிடம் எட்டாமிடம் ஒன்பதாமிடம் பத்தாமிடமாகிய இவைகளி லொன்றில் எழு கிரகங்கள் கூடி ஒன்ருய்ச் சேர்ந்து நிற்கப் பிறந்தவர் நிந்தை யுள்ளவராயும் பொய்யுரைப்பவராயும் மற்ற சூதுவாது புரிபவராயு மிருப்பர், எ - று. 6

கவிஞன்.

ஆடுசிலைவிடையா மையனுயிராயிடினும்
ஓடுங்கொடியோர்நோக்க வுபகேது—நீடுபுகழ்
சனியிரண்டினிற்கிற் ருர்குழலேகேளாய்
தனியச்சர மோதுவன் ருன்.

(இ - ள்.) மேஷமாவது ரிஷபமாவது அல்லது தனுசாவது ஒன்று இலக்கினமாயிருந்து அவ்விலக்கினுதிபதியை பாபக்கிரகங்கள் பார்க்க அதற்கிரண்டா மிடத்தில் கேதுவுஞ் சனியுமிருக்கப் பிறந்தவர் கவி வல்லவராயும் மிகு சாதுரியமுள்ளவராயும் பிரகாசிப்பர், எ-று. 7

ஆயிரம்பாட் டோதுவன்.

மண்ணின்விடைமதியை மன்னவனுமேபார்க்க
மண்ணின்மறிமதியை மால்பார்க்க—பெண்ணனங்கே
யூக்கமுடனுயிரம்பாட் டோதிடுவனுழிகைக்குள்
வாக்கிற்பிர சண்டவித்தை வந்து.

(இ - ள்.) ரிஷப ராசியிலிருக்குஞ் சந்திரனை குரு பார்க்க அல்லது மேஷத்தி லிருக்குஞ் சந்திரனை புதன் பார்க்கப் பிறந்தவர் ஒரு நாழிகைக்குள் ஆயிரம் பாட்டுகளைப் பாடும்படியான மகா பிரசண்ட வித்துவானுகவும் கவி பிரசங்கியாகவும் கீர்த்தியடைந்து சுகித்திருப் பர், எ - று. 8

சாஸ்திரியன்.

ஓரெட்டிற்பொன்னு மொன்பதைந்திலேழ்பத்தோன்
மீறிட்டபாவவர்க்க மில்லாமற்—சீறிட்ட
நற்சுபர்கள்பார்க்கி னலமானசாஸ்திரியாந்
தற்புவியில் விற்பனெனச் சாற்று.

(இ-ள்.) எட்டாமிடத்திற் குருவும், ஒன்பதாமிடம் அல்லது ஐந்தாமிடமாகிய விராசிகளில் சப்தம தசமாதிபதிகள் முறையே கூடி நின்று பாப சம்பந்த மில்லாமல் சுபர்கள் பார்க்கப் பிறந்தவர் நல்ல சாஸ்திரியாகவும் மகா பாண்டித்திய முடையவராகவும் விளங்குவர், எ-று. 9

## கல்விமான்.

வாக்கதனிற்சாமி மதியொன் றிவிராகுவரின்
பாக்கியத்திற்சுங்கன் பதிந்திடினும்—நீக்கியதோர்
நிறைந்தமதிரெண்டில் நேர்புதனுமைந்தில்
செறிந்திடினும் வித்தையெனச் செப்பு.

(இ-ள்.) இரண்டாமிடத்தில் குருவும், சந்திரனும், ஜென்ம லக்கினத்தில் இராகுவும், ஒன்பதாமிடத்தில் சுக்கிரனும் நிற்க அல்லது இரண்டாமிடத்திலாவது ஐந்தாமிடத்திலாவது பூரணச்சந்திரனும் புதனும் ஒன்ருய்ச் சேர்ந்திருக்கப் பிறந்தவர் கல்விமானுகவும் அல்லது வித்துவானுகவு மிருப்பர், எ-று. 10

## பண்டிதன்.

உயிரோனுமானு மொன்ருகக்கூடி
வைரமதாய்ப்பத்தில் வந்துநிற்க—தைரியமாய்
வித்துவானுவான் விதரணசாத்திரகலையிற்
புத்திநிபுண னென்றே போற்று.

(இ-ள்.) இலக்கினுதிபதியும் புதனும் ஒன்ருய்ச் சேர்ந்து பத்தாமிடத்தில் வீற்றிருக்கப் பிறந்தவர் நல்ல தைரியமுள்ள வித்துவானுகவும் விதரண சாஸ்திரியாகவும் சகல கலைக்கியானங்களு மறிந்த நிபுணராகவும் மேதாவியாகவு மிருந்து ஆகம புராணங்களைப் பிரசங்கிப்பர், எ-று. 11

## ஆயிரம்போன் அர்ச்சிப்போன்.

வாக்கேசன்லாபேசன் மகிழிலக்கினுதிபனும்
ஊக்கமுடன்கேந்திர கோணமுற—நீக்கரிய

நல்லசுபர்பார்க்க நலமாகவாயிரம்பொன்
மெல்லவர்ச் சிப்பநிதி மெய்.

(இ - ள்.) வாக்குஸ்தானதிபதியும் இலக்கினதிபதியும் பதினொன்றுக்குடையவனும் பலாஷ்டிகராய் கேந்திரத்திலாவது திரிகோணத்திலாவது வந்து நிற்க அவர்களைச் சுபக்கிரகங்கள் பார்க்கப் பிறந்தவர் ஆயிரம் பொன்னைச் சேகரிக்கப்படுவதன்றித் தானங் கொடுக்கப்பட்டவராவர், எ - று. 12

## மேற்படி தியாகி.

வித்தேசன்லாபேசன் வெறுங்கிரகமாறிநிற்கச்
சத்தேயுயிரோன்கோண கேந்திரமுற—இத்தரையில்
பொன்வெள்ளிநோக்கப் பொலிவுடனேவாயிரம்பொன்
அன்புடனே யர்ச்சிப்பா னுய்ந்து.

(இ - ள்.) இரண்டா மிடத்திற்கும் பதினோரா மிடத்திற்கும் உடையவர்கள் கிரகமாறி நிற்க இலக்கினதிபதி திரிகோண கேந்திரத்தில் வந்து நிற்க குரு சுக்கிர னிவர்கள் பார்க்கப் பிறந்தவர் காம்பீரமாயிருந்துகொண்டு ஆயிரம் பொன்னைச் சேகரஞ்செய்து தனதிபனாய் வாழ்வன், எ - று. 13

## பதினாயிரம்போன் றனவான்.

மீனந்தனுசில் விரல்சேய்சனியிருக்கத்
தானமகரகும்பஞ் சாரிடிலே—மோனமுற
மற்றக்கிரகங்கள் வந்திருக்கமாநிதியம்
பத்தா யிரம்பொன்னும் பார்.

(இ - ள்.) மீனராசியில் அல்லது தனுசுராசியில் அங்காரகன் சனியிருக்கவும், மகரத்தில் அல்லது கும்பத்தில் மற்ற எழு கிரகங்கள் பொருந்திநிற்கப் பிறந்தவர் விசேஷமாய் பதினாயிரம்பொன் சேகரித்து மிக கனவானாய் வாழ்ந்து இன்பத்தை யனுபவிப்பர், எ - று. 14

## மூவாயிரம்பொன் சேர்ப்போன்.

பாக்கியேசன்லாபேசன் பதிமித்திராகி
நீக்கமிலைங்கோண்பதிலே நின்றிடினும்—வாக்குயிரோன்
மித்திராயிபண்டில் மேவின்மூவாயிரம்பொன்
மெத்தவே சேர்த்துநிற்பான் மெய்.

(இ - ள்.) ஒன்பதாமிடத்திற்குடையவனும் பதினோராமிடத்திற்குடையவனும் நேசர்களாயிருந்து ஐந்தாமிடம் அல்லது ஒன்பதாமிடத்தில் நிற்க இலக்கினாதிபதியும் இரண்டாமிடத்ததிபதியும் மித்திரர்களாய் இரண்டாமிடத்தில்நிற்கப் பிறந்தவர் ஆயிரம் பொன்னைச் சேகரஞ் செய்வர், எ - று. 15

## நாலாயிரம்பொன் சேர்ப்போன்.

லாபேசன்வாக்குயிரோ னண்பருடன்கூடி
தீபமெனக்கோணகேந் திரஞ்சேரில்—தாபமுடன்
நண்ணநாலாயிரம்பொன் நலமாகவர்ச்சிப்பன்
திண்ணமெனச் சொல்வாய் தெரிந்து.

(இ - ள்.) பதினோராமிடத்திற்குடையவனும் இரண்டாமிடத்திற்குடையவனும் இலக்கினாதிபதியும் மித்திரர்களோடுகூடி திரிகோணகேந்திரங்களில் வந்துநிற்கப் பிறந்தவர் ஆயிரம் பொன்னைச் சேகரஞ்செய்து இலட்சுமி விலாசமாய் வாழ்ந்து சுகத்தை யனுபவிப்பர், எ - று.

## இலட்சம்பொன் சேர்ப்போன்.

லக்கினேசன்வாக்கினிலும் லாபேசன்பத்தினிலும்
சிக்கெனவேவாக்கேசன் சேரிடினும்—பொக்கெனவே
போக்கியநல்லோருயர்வாய்ப் புகனூராயிரம்பொன்னை
ஆக்கமுட னர்ச்சிப்பா னுய்ந்து.

(இ - ள்.) இரண்டாமிடத்தில் இலக்கினாதிபதியும் பத்தாமிடத்தில் இலாபாதிபதியும் வாக்குஸ்தானாதிபதியும் சேர்ந்திருக்கப் பிறந்தவர் நன்மார்க்கத்தில் ஆயிரம் பொன்னைச் சேகரஞ்செய்து விவேகியாய் சன்மார்க்கரோடு சகவாசம்புரிந்து ஞானசிந்தையை யுடையவராவர், எ - று.

### திரவியவந்தன்.

உயிரேசன்சுபராகி யுயர்ந்திரண்டிலேயிருக்கத்
தைரியமாய்ப்பொன்னேக்கத் தனுதிபனும்—வைரமதாய்
சொச்சேந்திராங்கிஷமேறிற் சூழுமனேகபொருள்
கைச்சேரு மென்றுரைப்பாய் காண்.

(இ - ள்.) இலக்கினுதிபதி சுபவர்க்கமாய் இரண்டாமிடத்தி விருக்க பலாஷ்டிக குருவானவர் பார்க்க வாக்குஸ்தானுதிபதியானவர் சுயக்ஷேத்திரத்திலிருக்கப் பிறந்தவர் அகஸ்மாத்தாய் புதையல் கிடைத்து அதினுல் வெகு போக்கிய இன்பத்தை யனுபவிக்கும் வல்லவராவர், எ - று. 18

2-வது பாவகம் முற்றிற்று.

---

## 3-வது பாவகம்.

## சகோதரஸ்தான பலன்.

### இருசகோதரம்.

குருதிக்குமூன்றிற் குணமுடையோர்தானிருக்கச்
சுருதிக்குவாக்குடையோன் சுபராக—வருமயிலே
பார்மகனுக்காறிற் பண்புடையோர்தானிருக்க
ஈர்சகோ தரமெனவே யெண்.

(இ - ள்.) அங்காரகனுக்கு மூன்றுமிடத்தில் சுபக்கிரகங்கள் நிற்கவும் அவர்களை இரண்டாமிடத்திற்குடையவனும் சுபக்கிரகங்களும் பார்க்க முன் அங்காரகனுக்கு ஆறுமிடத்தில் சுபக்கிரகங்கள் நிற்கவும் பிறந்தவர் சூரதத்துவமான இரண்டு சகோதரர்களுள்ளவராவர், எ - று.

### ஒரு சகோதரம்.

மூன்றிற்குடையோன் மூன்றேழிலேயிருக்க
ஈன்றவியத்திற்பாவ ரெய்திடினுங்—தான்காண

மண்மக்களைச்சொல்லில் மனிதர்சகோதரந்தான்
ஒண்ணென்றே சொல்லி யுரை.

(இ - ள்.) மூன்றுமிடத்திற் குடையவன் மூன்றுமிடத்திலாவது அல்லது ஏழாமிடத்திலாவதிருக்க இலக்கினத்திற்குப் பனிரண்டாமிடத்தில் பாபக்கிரகங்கள் நிற்கப் பிறந்தவர் ஏக சகோதர னுள்ளவராவர் இவனுக்குப் பிறகு மறு சகோதரந் தக்காதிருப்பவராவர், எ - று.

சகோதரவர்த்தனை.

மூன்றுறிலேசுபராய் மூன்றுறினி லுடையோன்
என்றுதநல்லோரை யெய்திடினுந்—தோன்றுத
கோகனகமென்முலையாய் கூறுஞ்சகோதரங்கள்
ஆகமுடன் வர்த்தனையா மாய்ந்து.

(இ - ள்.) மூன்றுமிடத்தில் அல்லது ஆறுமிடத்தில் சுபக்கிரகங்கள் நின்று மேற்படி இரண்டு ஸ்தானத்திற்கு முடையவர்கள் சுபக்கிரகங்களுடன் சேர்ந்திருக்கப் பிறந்தவர் பல சகோதரர்களை யுடையவராய் அதிக சம்பத்துள்ளவராய் வாழ்ந்து சகல பாக்கியத்தையும் அனுபவிப்பர், எ - று. 21

நானுவித இரத்தின பூஷணன்.

நாலைந்துமூன்றுடையோ னன்றாய்ப்பலத்திடினும்
பாலினுமென்மொழியாய் பகரக்கேள்—மேலாக
நானுவிதமான ரத்தினங்கள்பூண்டிடுவன்
மேனுடர்சொன்ன விதம்.

(இ - ள்.) மூன்றுமிடத்தோனும், நான்காமிடத்தோனும், ஐந்தாமிடத்தோனும் அந்தந்த ஸ்தானத்தில் நன்றாக பலத்து நிற்கப் பிறந்தவர் நானுவிதமான இரத்தின பூஷணங்களைத் தரித்து மிக சம்பத்துடையவராய் சதாகாலமும் வாழ்வுபுரிந்து இன்பசுகத்தை யனுபவிப்பர், எ - று.

சேவிடாதல்.

மூன்றிற்பதினொன்றில் முன்னிராகுகேதுசனி
நீன்றகுளிகனே நேராக—ஈன்றருளத்

**தோன்றற்செவிடாகுந் தோகையிருபொருளை**
**யான்றுரைத்தார்சகாதேவ ரன்று.**

(இ - ள்.) மூன்றுமிடத்தில் அல்லது பதிஞேருமிடத்தில் இராகு, கேது, சனி, குளிகனுகிய இந்நால்வர்களும் நிற்கப் பிறந்தவர் செவிடராவர். இந்நால்வர்களையும் சுபக்கிரகங்கள் பார்க்கச் சில நாளில் அச்செவிடு நீங்கி நன்மார்க்க நடக்கையும் ஞானசிந்தனையு முடையவராவர், எ - று. 23

## பிறவிச் செவிடு.

**நல்லமதிவெள்ளிபுந்தி நான்மறையோன்மூன்றினிலே**
**செல்வமுடனிருக்கச் செவிடாகும்—மெல்லனையாய்**
**பூராடங்கேதுவுக்கும் போன்றச்செவிடாகும்**
**ஆராய்ந்தார்மாமுனிவ ரன்று.**

(இ - ள்.) சுபவர்க்கமாகிய சந்திரன், சுக்கிரன், புதன், குருவாகிய இந்நால்வரும் மூன்றுமிடத்திலிருக்கப் பிறந்தவர் பிறவிச் செவிடராவர் அல்லது பூராடத்தில் கேது நிற்கப் பிறந்தாலும் தப்பாமற் பிறவிச் செவிடராய் என்றென்றைக்கும் மனசஞ்சலத்தை யடைவர், எ - று. 24

## பொருட்சேதம், ரோகி.

**எட்டுக்குடையோனென் றினிலிருக்கச்சேர்தனங்கள்**
**நட்டமுடன்சேத னம்பொருளும்—திட்டமதாய்**
**சேரச்சிலவாகுஞ் சேர்ந்தகனரோகமதாய்**
**பாரினிற்றுற்பலமாம் பார்.**

(இ - ள்.) எட்டாமிடத்திற்குடையவன் இலக்கினத்திலிருந்து பாபர்களில் ஒருவரேனும் அவனைப் பாராதிருக்கப் பிறந்தவர் தனக்குண்டாகிய திரவியங்க ளெல்லாவற்றையுந் தோற்று சிலவாக்கி தான் யாவற்றினும் நஷ்டப்படுவதுமன்றி விசேஷ பிணியுண்டாகி துற்பலப் படுவர், எ - று. 25

### சகோதரவிர்த்தி, தீமை.

பாந்தமதிமூன்றினில்நட் பாட்சியுச்சவர்க்கமதாய்
விரைந்திடவேநிற்க வெகுநன்மை—நிரந்தரமாய்ச்
சாமியுமேநிற்கச் சகோதரங்கள்வர்த்தனையாம்
வாமகனபூஷணமாம் வாழ்த்து.

(இ - ள்.) மூன்றுமிடத்திற் சந்திரன் நட்பாகவாவது சுயக்ஷேத்திரனுகவாவது அல்லது உச்சனுகவாவதிருக்கப் பிறந்தவர் விசேஷ நன்மைகளை யடைவர் ஈதன்றி அச் சந்திரனேடு இலக்கினுதிபதியுங் கூடிநிற்கில் சகோதர விர்த்தியுண்டாய் கர்ணுபரணங்களுந் தரிப்பர், எ - று. 26

### 3-வது பாவகம் முற்றிற்று.

---

## 4-வது பாவகம்.

# மாதுருஸ்தான பலன்.

### நீதிமான்.

வாகனத்தோனீரைந்தில் வந்திருக்கரெண்டுடையோன்
ருகமுடனேபார்க்கத் தான்கூட—வாகனத்தில்
தாபசுபரிருக்கத் தார்குழலேகேளாய்
லாபமிகுநீதிமா ணும்.

(இ - ள்.) நான்காமிடத்திற்குடையோன் பத்தாமிடத்திலிருக்க இரண்டாமிடத்திற்குடையோன் அவனைப் பார்க்க அல்லது சேர்ந்திருக்க ஷை நான்காமிடத்தில் சுபர்களாவது கூடியிருக்கப் பிறந்தவர் வெகு லாபமுண்டாய் வாழ்ந்து நல்ல நீதிமானுய் கீர்த்தியை யடைவர், எ - று. 27

### பிள்ளைகள் 5.

முன்னுன்கிற்றேரவனு மூன்றிவரிலாபத்தில்
நன்னுன்கிற்குருமதியும் நாடிடினும்—பின்னுலே

ஒன்றைந்துவொன்பதிலே யோர்பளிங்குநின்றிடினும்
என்றைந்துபிள்ளையுண்டா மே.

(இ - ள்.) பன்னிரண்டாமிடத்தில் சூரியனிருக்க, பதினோரு மிடத்திலாவது மூன்றுமிடத்திலாவது அல்லது நான்காமிடத்திலாவது குருவுஞ் சந்திரனுங் கூடிநிற்க, இலக்கினம் ஐந்தாமிடம் ஒன்பதாமிடத்தில் சுக்கிரனிருக்கப் பிறந்தவர் ஐந்து பிள்ளைகளைப் பெற்று சுகமாய் வாழ்வர், எ - று. 28

## அநேக புத்திரர்கள்.

அஞ்சொன்பதொன்றி லதற்குடையோர்தான்பலமாய்
மிஞ்சுகண்டங்கோணமிக வேறிடிலே—அஞ்சலுடன்
ஓரேசன்மூன்பலத்து வுட்பார்க்கப்புத்திரர்கள்
நேராகுமென்பாய் நிசம்.

(இ - ள்.) இலக்கினுதிபதி ஐந்தாமிடத்ததிபதி ஒன்பதாமிடத்ததிபதிகளாகிய மூவரும் பலாஷ்டிகராய்த் தாங்கள் திரிகோண கேந்திரங்களிலிருக்கக் குரு வலுவோடிருந்து பார்க்கப் பிறந்தவர் மகா பலசாலிகளாகிய அனேகம் பிள்ளைகளைப்பெற்று சுகசீவிகளாய் வாழ்வர், எ - று. 29

## புத்திரர்கள் 10.

ஒன்றெண்பதிற்குடையோ ரோரேழிலேயிருக்க
மன்றுலகில்வாக்கேசன் வாழுயிரில்—அன்றி
ஓரஞ்சிற்குடையோ னுட்பலக்கக்குருநோக்க
ஈரஞ்சுபுத்திரரா மெண்.

(இ - ள்.) இலக்கினுதிபதியும் ஒன்பதாமிடத்ததிபதியும் எழாமிடத்தி லிருக்க, இரண்டாமிடத்ததிபதி இலக்கனத்தி லிருக்க, ஐந்தாமிடத்ததிபதி பலாஷ்டிகனுக அவனைக் குரு பார்க்கப் பிறந்தவர் பத்து பிள்ளைகளைப்பெற்று கனவானுய்ச் சகல ஐஸ்வரியத்தையு மடைவர், எ - று. 30

### புத்திரர்கள் 32.

இருநான்கின்மூன்றி லிருக்கச்சனிவீடாய்
குருநாதன்பார்க்கக் கோணத்தே—வருமவர்கள்
இருக்கவெகுலக்கமெல்லா மெண்ணுன்குபுத்திராம்
பருக்குழலேமாதே பகர்.

(இ - ள்.) மூன்ருமிடமாவது அல்லது எட்டாமிடமாவது சனி வீடாக அது திரிகோண ஸ்தானமாயிருந்து குரு பார்வையுடையவராகப் பிறந்தவர் முப்பத்திரண்டு பிள்ளைகளைப் பெற்று சுபக்ஷேமமாய் வெகு சம்பத்துகளை இடைவிடாமல் நாடோறுங் கைக்கொள்வர், எ - று. 31

4-வது பாவகம் முற்றிற்று.

---

### 5-வது பாவகம்.

## புத்திரஸ்தான பலன்.

### பத்திரபாக்கியன்.

ஆடுதேளிலக்கினமா யஞ்செட்டிலற்பருறின்
ஓடுமுயிர்சேய்தொழிலி லுதவியுமே—வீடு
நாப்பாலிற்சுபரிருக்க நன்ருகவேகூடில்
மூப்பாகமக்களுண்டா மூன்.

(இ - ள்.) மேஷ விராசியாகிலும் அல்லது விருச்சிக விராசியாகிலும் இலக்கினமா யிருந்து அதற்கு ஐந்தாமிடம் எட்டாமிடத்தில் பாபக் கிரகங்களோடு இலக்கினுதிபதியும் செவ்வாயுங் கூடி நிற்கத் திரிகோண ஸ்தானங்களில் சுபர்களிருக்கப் பிறந்தவர் புத்திர சம்பத்தை யடைவர், எ - று. 32

### தத்துப்புத்திரர்.

அஞ்சொன்றுடையோர்க ளவர்கிரகமாறிநிற்கச்
செஞ்சொல்மொழியாளே தீயவர்க்கு—வஞ்சமிலா

அஞ்சினிலேநல்லோ ரவர்பார்க்கத்தப்பாது
கொஞ்சுமதலையெனக் கூர்.

(இ - ள்.) இலக்கினாதிபதியும் பஞ்சமஸ்தானாதிபதியும் பரிவர்த்தனமாக அல்லது கிரக மாறியிருந்து அவர்களோடு பாபர்கள் சேர்ந்திருக்க ஷை ஐந்தாமிடத்தை சுபக்கிரகங்கள் பார்க்கப் பிறந்தவர் தனக்குப் புத்திரர்களின்றி வேறு தத்துப்புத்திரனை வளர்ப்பவராவர், எ - று. 33

## விபசார புத்திரன்.

ஆறுக்குடையவனை யம்புலிசேய்நாடி
கூறியேநான்கிற் கூடிநிற்க—வீறுசுடர்
பாராதிருக்கிற் பனிமொழியேவியபிசாரி
ஆராயிற்புத்திரருண் டாம்.

(இ - ள்.) ஆறுமிடத்ததிபதியை சந்திரனுஞ் செவ்வாயுங் கூடி நான்காமிடத்திற் சேர்ந்து நிற்க, அவர்களை சூரியன் அல்லது சுபக்கிரகங்கள் பாராதிருக்கப் பிறந்தவர் தனக்குப் பிள்ளையில்லாமல் அல்லது பிறந்த பிள்ளைகள் தக்காமல் வேறொரு வியபிசாரப் புத்திரனைத் தக்கதாகக் கொள்வர், எ - று. 34

## சதா விபசார புத்திரர்கள்.

இராகுடனேபானுறினும் நல்லமதியுறினும்
ஓர்கொடியர்நோக்க வூர்கூடிச்—சீர்பெறவே
நாலிலிருக்க நற்கிரகம்பாராரேல்
சாலவிபசாரிசுதன் றான்.

(இ - ள்.) இராகு, சூரியன், சந்திரனாகிய மூவர்களுங் கூடி நான்காமிடத்திலிருக்க, இவர்களை ஒரு பாபக்கிரகம் பார்த்து மற்ற சுபக்கிரகங்களில் ஒருவரேனும் பாராதிருக்கப் பிறந்தவர் சதாகாலமும் தன் பிந்துவிற்குப் பிறவாது மற்றோர் சோரபுருஷனுக்குப் பிறந்த பிள்ளைகளையே வளர்ப்பர், எ - று. 35

## உபய பிதாக்கள்.

தேளின்மதியைத் திங்கள்மகன்பார்க்கில்
வாளுமுபயபிதா மைந்தனும்—கேளும்
மதிசேய்புதன்கூடில் மானேயுபயபிதா
அதிவிதமாயாகு மறி.

(இ-ள்.) விருச்சிகத்திற் சந்திரனைப் புதன் பார்த்தாலும் அல்லது அச் சந்திரனை செவ்வாய் புதன் பார்க்கவும் அல்லது அவ்விருவருமே கூடி நிற்கவும் பிறந்தவர் தன் பிதாவினது பிந்துவின்றி மற்றொருவனது பிந்துவிற்குப் பிறந்தவராவர் அதாவது உபய பிதாக்களுடையவராவர், எ-று. 36

## இரட்டை யாண்.

தண்டுசிலையுயிராய் தார்வேந்தனுமதியுங்
கொண்டரவியுங்குடத்திற் கூடினல்—ஒண்டொடியே
காரணமாயிரட்டையாண் காதலுடனேபிறக்கும்
ஆரணரேசொன்ன தறி.

(இ-ள்.) மிதுனராசி அல்லது தனுசுராசி இலக்கினமாக விருந்து கும்பவிராசியிற் சந்திரனுங் குருவுங் கூடியிருக்கப் பிறந்தவர் இரட்டைப் பேறுடைய பிள்ளைகளைப் பெறுவர். அதாவது இரண்டும் ஆண் பிள்ளைகளாய்ப் பிறந்ததை ஒன்றற்கொன்று குறைவின்றி வளர்ப்பவராவர், எ-று. 37

## இரட்டைப் பெண்.

கன்னியாலக்கினமாய்க் கதிர்சேய்மதிகூடில்
உன்னுங்கொடியர்சுப ருறநோக்கில்—முன்னேழில்
மதிமகனேநிற்கின் மாறுமற்பெண்ணிரட்டை
துதிபெறவேதோன்றியதாய்ச் சொல்.

(இ-ள்.) கன்னியாலக்கினத்தில் சூரியன், சுக்கிரன், அங்காரகன் கூடியிருக்க அவர்களைப் பாபக் கிரகங்களுஞ் சுபக் கிரகங்களும பார்க்க எழாமிடத்தில் புதனிருக்கப் பிறந்தவர் இரட்டைப் பேறுடைய

பிள்ளைகளைப் பெறுவர் அதாவது இரண்டும் பெண் பிள்ளைகளாய்ப் பிறந்ததை வளர்ப்பர், எ - று. 38

## புத்திர ரரிட்டம்.

அஞ்சிற்பனிரண்டி லழகுடையகேதுறினுங்
கொஞ்சு திங்கள்சனிசேய் கூடிடினும்—வஞ்சமிலா
தேழிற்சனியிருக்க யேந்திழையேகேளாய்
பாழிற்சுதனரிட்டம் பார்.

(இ - ள்.) ஐந்தாமிடத்தில் அல்லது பன்னிரண்டா மிடத்தில் கேதுநிற்க அவனை சந்திரன், செவ்வாய் சனியாகிய மூவருங் கூடியிருக்க அல்லது ஏழாமிடத்தில் சனியிருக்கப் பிறந்தவர் அறிவு கெட்டு சபலசித்தனுவதுமன்றிப் புத்திர ரரிட்டமு மடைந்து துன்பப்படுவர், எ - று. 39

## துற்புத்திரர், சற்புத்திரர்.

அட்டமத்தோனைந்திருக்க வணிமதலைச்சத்துருவாம்
மட்டபொருள்மதலையால் மாநட்டம்—பட்டுயிரோன்
அஞ்சிலிருக்க வாயுசுதன்சந்ததியும்
மிஞ்சுமட்டமயோக மென்.

(இ - ள்.) அஷ்டமாதிபதி ஐந்தாமிடத்தி லிருக்கப் பிறந்தவர் துற்புத்திரனுய் சத்துருவாகி பொருட்சேதத்தை யடைவர் இலக்கினுதிபதி ஐந்தாமிடத்தி லிருக்கப் பிறந்தவர் தீர்க்காயுளுள்ள சற்புத்திரனு யுதித்து அஷ்டைஸ்வரியங்களையு மடைந்து புகழுடம்பினராவர், எ - று. 40

## வெகுபுத்திரர், 2-ந்தார புத்திரர்.

அஞ்சாமிடங்கடக மாயிரவிநின்றிடினு
மிஞ்சவெகுபுத்திரரா மேதினியில்—தஞ்சமுடன்
செவ்வாயேபார்க்கிற் சேரிரண்டாந்தாரத்திற்
கொவ்வாமதலையெனக் கூர்.

(இ - ள்.) ஐந்தாமிடமானது கடக ராசியாயிருந்து அதிற் சூரிய னிருக்கப் பிறந்தவர் வெகு புத்திரருண்டா யிருப்பர் அல்லது அங்காரக னிருக்கப் பிறந்தவர்க்கு இரண்டாந்தாரத்தினது பிள்ளைகள்தான் பலிதப்படும் ஆனல் முதல்தாரத்தினது பிள்ளைகள் தக்காதவராவர், எ - று. 41

## அற்பபுத்திரர், பரதாரம்.

**சிங்கந்தேள் கன்னி சேய்வினையமைந்தாகில்**
**அங்கவர்க்கற்பபுத்திர ராமென்றே—பொங்கமதாய்**
**மதிக்கைந்திலேகனய் வருஞ்சனியுமேநிற்கிற்**
**பதிக்குப்பரதாரமாம் பார்.**

(இ - ள்.) சிங்கராசியாவது விருச்சிகராசியாவது அல்லது கன் னியாராசியாவது ஐந்தாமிடமா யிருக்க அதில் அங்காரகன் நட்புள்ள ஸ்தானமா யிருக்கப் பிறந்தவர் அற்ப புத்திரருண்டாயிருப்பர் அல்லது சந்திரனுக்கு ஐந்தாமிடத்தில் சனி நிற்கப் பிறந்தவர் பலதாரங்களை யுடையவராவர், எ - று. 42

## புத்திரரின்மை, அற்பபுத்திரர்.

**அஞ்சாமிடங்குருவா யதுமகராந்தானகில்**
**பிஞ்சுபுதல்வர் பிறப்பதிலை—மிஞ்சவரும்**
**வேந்தர்களைந்தில் மிகக்கொடியர்கூடிநிற்கில்**
**வாய்ந்தபுத்திரரற்ப மாம்.**

(இ - ள்.) ஐந்தாமிடமானது மகராராசியாய் அதில் குருவிருக்கப் பிறந்தவர் பிள்ளைகளைப் பிறவாத பெருமலடராவர் அல்லது குருவிற்கு ஐந்தாமிடத்தில் பாபிகள் நிற்கச் சொற்பபுத்திர ருண்டாயிருப்பர். அதாவது பெற்றுப்பெற் றிழப்பர், எ - று. 43

## அமங்கலை.

**ஏழுக்குடையோ னிரவிசனிகூடி**
**வாழுமுயிர்க்காரெட்டில் வந்துநிற்கச்—சூழ்பவரை**

மண்மகனிராகும் மகிழ்ந்தவரைநோக்கிடினும்
பெண்மயிலேயமங்கலையாய்ப் பேசு.

(இ - ள்.) ஏழாமிடத் ததிபதியோடு சூரியனுஞ் சனியுங்கூடி ஆறுமிடத்தில் அல்லது எட்டாமிடத்திலிருக்க அவர்களைச் செவ்வாயும் இராகுவும் பார்க்கப் பிறந்தவர் பிள்ளைகளில்லாத பாவியாவர் அதாவது தானிறந்து மனைவியானவள் அமங்கலையா யிருப்பவராவர், எ - று. 44

5-வது பாவகம் முற்றிற்று.

---

## 6-வது பாவகம்.

# சத்துருஸ்தான பலன்.

### சத்துரு துக்கம்.

இரவிமதிவெள்ளி யிரணியனுங்கூடிற்
பரசத்துருதுக்கம் பாரினிலே—காமிஞ்சி
மூன்றிலிரவியது மூவிரண்டிற்பாவருறிற்
றோன்றுஞ்சத்துருதுக்கஞ் சொல்.

(இ - ள்.) ஆறுமிடத்தில் சூரியன், சுக்கிரன், குரு, சந்திரனுகிய நால்வர்களும் ஒருங்கேகூடி நிற்கப் பிறந்தவர் இதரமான விரோதிகளால் துக்கங்களை யனுபவிப்பர் அல்லது மூன்றுமிடத்தில் சூரியனும், ஆறுமிடத்தில் பாபர்களுமிருக்கப் பிறந்தவர் சத்துருக்களால் துன்பத்தை யனுபவிப்பர், எ - று. 45

### சத்துருமித்துரு தாரம்.

தேளுமதியுந் தினகரனுமேகூடில்
வாளுமித்துருதாரம் வன்பகையாம்—கேளும்
வாக்கேழினிலுடையோர் வழிபாபருங்கூடில்
நீக்காதசத்துருக்க ணேர்.

(இ - ள்.) விருச்சிகராசியில் சூரியனும், சந்திரனுங் கூடியிருக்கப் பிறந்தவர் தன் சினேகிதனது மனைவியினால் அதி விரோதத்தை யடைவர் அல்லது இரண்டாமிடத்ததிபதி ஏழாமிடத்ததிபதிகள் பாப வர்க்கங்களுடன் கூடி ஆறுமிடத்தில் நிற்கத் தன் மனைவியின் விரோதத்தினால் துக்கப்படுவர், எ - று. 46

## சோரன்.

மண்ணவனும்வாக்கோனை வன்புந்திகூடிடினும்
விண்ணவரும்வாக்கு விரோதம்—எண்ணரிய
இடபமதியை யியல்புதனுமேபார்க்கிற்
றிடமுடையசோரனெனச் செப்பு.

(இ - ள்.) இரண்டாமிடத்ததிபதியைப் புதன் கூடிநிற்கப் பிறந்தவர் சுதா வாக்குவிரோதியாயிருப்பர். அன்றியும் ரிஷபச் சந்திரனைப் புதன் பார்க்கப் பிறந்தவர் அதி தைரியமுள்ள திருடரா யிருப்பதுமன்றி பிறருக்கு நல்ல யோக்கியராகவும் மிகுந்த மரியாதையாகவு மிருப்பர், எ - று. 47

## பிச்சை யெடுப்பவன்.

ஒன்றிரண்டிற்குடையோ னோர்பாபருங்கூடி
அன்றியேநீச்சவஸ்த மனமாகி—மன்றியொன்பான்
அஞ்சோன்பலவீன னுயிடிலேதாழ்ந்தவரைக்
கெஞ்சியிறப்பான்பிச்சைக் கே.

(இ - ள்.) இலக்கினாதிபதியும் இரண்டாமிடத்ததிபதியும் பாபருடன்கூடி நீச்சம் அல்லது மூடமா யிருப்பதன்றி ஐந்தாமிடத்ததிபதியும் ஒன்பதாமிடத்ததிபதியும் பலயீனமாயிருக்கப் பிறந்தவர் விரோதிகளிடத்தில் சேர்ந்து யாவரையும் வணங்கிப் பிச்சை யெடுப்பர், எ - று. 48

## கள்ளன்.

உதையத்திற்கெட்டி லுயராகுவேந்தன்
அதிபதியாய்க்கூடி யவரிருக்கச்—சதிபெறவே

**ரவிமகனுஞ்செவ்வாயு நன்றாகவேபார்க்கக்**
**குவிமுலையாய்சோரனெனக் கூர்.**

(இ - ள்.) இலக்கினத்திற்கு எட்டா மிடத்தில் இராகுவும் குருவும் நிற்க இவர்களைச் சனியும் செவ்வாயும் பார்க்கப் பிறந்தவர் ஒருவர் பொருளை அபகரிக்கு மெண்ண முடையவராய்ச் சதா காலமும் திருடிப் பிழைத்து வயிறு வளர்க்கும் துஷ்டத்தனமுள்ள சோரனவர், எ - று.

## வயது 50-ல் ரோகி.

**ஒன்றிற்சேயிரவியினை யோங்குவெள்ளிக்கூடிடினு**
**மன்பதினில்ரோகியதாம் வாழுயிரில்—நன்றியுள**
**சேயிரவிகாரி சேர்ந்திடினும்ரோகியதாம்**
**பாயிரவிபுந்தியுமே பார்.**

(இ - ள்.) இலக்கினத்தில் சூரியன், சுக்கிரன், செவ்வாய் மூவருங் கூடிநிற்கப் பிறந்தவர் ரோகியாவர் இலக்கினத்தில் சூரியன் அங்காரகன் சனி மூவருங்கூடி நிற்கில் தீரா ரோகியாவர் அல்லது அந்த ஸ்தானத்தில் சூரியன் புதன் இருவர்கள் சேர்ந்திருந்தாலும் ரோகியாய் பின்பு சுவஸ்தப்படுவர், எ - று. 50

## விதரணன்.

**ஆறுக்குடையோனை யரும்பாபருங்கூடிச்**
**சீறுடையவொன்றெட்டிற் சேர்ந்துவரில்—கூறுமிடந்**
**தேனார்மொழியுடையாய் செவ்வாயிதழனமே**
**நானுவிதரணன்றா னாள்.**

(இ - ள்.) எட்டாமிடத்ததிபதி பாப வர்க்கங்களுடன் கூடி இலக்கினத்திலாவது அல்லது எட்டா மிடத்திலாவது நிற்கப் பிறந்தவர் நானுவிதத்தில் சாமர்த்திய முடையவராய் புஜபல பராக்கிரமத்திற் சிறந்த நிபுணனெனப் பெயரெடுப்பர் அதாவது மல் யுத்தத்தில் மகா வல்லவராவர், எ - று. 51

## விதரணவுதாரன்.

எட்டாறினிலுடையோ னேகமாய்நின்றிடினு
மட்டாருஞ்சேய்நோக்க மதியெட்டில்—திட்டமதாய்
செவ்வாயேபார்க்கச் சேரவிதரணன்றூன்
ஒவ்வாமைவார்விழியே யுரை.

(இ-ள்.) இலக்கினத்தில் எட்டாமிடத்ததிபதியும் ஆறுமிடத்ததிபதியும் ஒன்றுகக் கூடிநிற்க அவர்களை அங்காரகன் பார்க்க எட்டாமிடத்தில் சந்திரனிருக்க அதையும் அங்காரகன் பார்க்கப் பிறந்தவர் நல்ல விதரணவுதார வீரதத்துவத்தையுடைய தீரஞக விளங்குவர், எ-று. 52

## உன்மத்தமாதல்.

இருமூன்றினுன்கோ னேகமாய்க்கூடி
அரிதானபுந்தி யணுகிடினும்—பெரிதான
இரவியுமொன்றி லிருக்கினுமுன்மத்தம்
அறுமறையோர்சொன்னு ராய்ந்து.

(இ-ள்.) ஆறுமிடத்தில் நான்காமிடத்ததிபதி கூடியிருக்க அவரோடு புதன்சேர அல்லது பார்த்திருக்க இலக்கினத்தில் சூரியன் வீற்றிருக்கப் பிறந்தவர் பெரியோர்களால் சித்தப்பிரமையுடையவராவர் அதாவது உன்மத்தனுய் வீண்காலங் கழித்திடுவர், எ-று. 53

## ஊழியாலிறத்தல்.

எட்டேழுமைந்து மிரண்டுமூன்றிற்குடையோன்
றிட்டமாயிராகுசனி சேய்குளிகன்—கட்டளையாய்
கூடிமதியாறிற் கொண்டிருக்கரோகமதாய்த்
தேடும்வாந்திபேதியெனச் செப்பு.

(இ-ள்.) எட்டாமிடத்ததிபதியும் ஏழாமிடத்ததிபதியும் ஐந்தாமிடத்ததிபதியும் மூன்றுமிடத்ததிபதியும் இரண்டாமிடத்ததிபதியுமாகிய இவர்களை இராகு சனி செவ்வாய் குளிகன் கூடி சந்திரன் ஆறு

மிடத்திலிருக்கப் பிறந்தவர் வாந்திபேதிகண்டிறப்பர் அல்லது உஷ்ண பேதி சீதபேதியினு லிறப்பர், எ - று. 54

## ஏழைப் பிழைப்பு.

**குதிரையுடன்ரோகணியிற் குளிர்மதியுந்தானிருக்கக்**
**கதிரோன்மதிபூசங் கால்நாள்—அதிவிதமாய்**
**மேவியேதானிருக்க வீடுமதுலக்கினமாய்**
**ஓவியமேயேழையதா யோது.**

(இ - ள்.) அசுவனி ரோகணியில் பூரணச்சந்திரனிருக்க பூசம் மகத்தில் சூரியனிருக்க இந்நட்சத்திரங்கொண்ட ராசியே இலக்கினமாகப் பிறந்தவர் சித்திரப்பதுமைபோல அழகுள்ளவரா யிருப்பதுமன்றி சிலகாலம் ஏழையாகவுமிருந்து சங்கடப்பட்டுழல்வர், எ - று. 55

## கோசபீசநாபி பருத்தல்.

**இரவிசனியொன்றேழில் வியத்தரவநின்றிடினும்**
**இரவிபுதன்சேய்வெள்ளி யெய்திடினும்—பரவியே**
**கோசமுடன்பீசமுமே கொண்டதொருநாபியுமே**
**பாசமுடனேபருக்கும் பார்.**

(இ - ள்.) சூரியன் சனி இவ்விருவரும் இலக்கினம் அல்லது ஏழாமிடத்திலிருக்க இராகு பனிரெண்டாமிடத்தில் நிற்க இந்த ஸ்தானங்களில் சூரியன் புதன் சுக்கிரன் அங்காரகன் இவர்கள் கூடியிருக்கப் பிறந்தவர் கோசமும் பீசமும் நாபியும் பருத்திருப்பர், எ - று. 56

## இலிங்கஸ்தூலம்.

**இருமூன்றிலேபுதனு மேழிரவிநின்றிடினும்**
**வருமுயிரிற்பாவர் வந்திடினும்—மருவியே**
**செவ்வாயேபார்க்கிற் சேர்ந்தலிங்கஸ்தூலமதாய்**
**ஒவ்வாமைவார்விழியா யுரை.**

(இ - ள்.) ஆறுமிடத்தில் புதனும் ஏழாமிடத்திற் சூரியனும் வீற்றிருக்க ஜன்மராசியில் பாவக்கிரகங்களிருக்க இவர்களைச் செவ்வாயான

வன் பார்க்கப் பிறந்தவர் இலிங்கமாவது அல்லது பீசமாவது பருத்திருப்பதோடு பலநாளும் வாதைப்பட் டுழன்று பின்பு வாதரோகத்தை யனுபவிப்பர், எ - று. 57

## ஊனதேகமுடையவன்.

அஞ்சிற்குசனு மஞ்சிற்பூரத்தினிலு
மிஞ்சிபெண்ணொன்றின்மூல் மேவிடினும்—நஞ்சுவிழி
மானேயிதுவு மருவுலக்கினமெனினும்
ஊனசரீரமென வோது.

(இ - ள்.) ஐந்தாமிடத்தில் அங்காரகனிருக்க அவ் வைந்தாமிடமானது பூரநட்சத்திரஞ் சேர்ந்த ராசியாய் நிற்க பதினொருமிடமானது மூல நட்சத்திரஞ் சேர்ந்த ராசியாகி அதுவே ஜன்மலக்கினஞ் சேர்ந்த ராசியாகப் பிறந்தவர் ஊனதேகியாய் மிக துற்பலனை யனுபவிப்பர், எ-று.

## மூடவன், குறளற்பன்.

மீனமுயிராகி வெள்ளிமதிசேய்காரி
தானேயிருக்கத் தனிமூடமாம்—வானமதில்
உதையஞ்சனியாகி னுயிர்மூன்றினான்கினின்மால்
புதையக்குறளற்பம் புகும்.

(இ - ள்.) ஜன்மலக்கினம் மீனமாகவிருந்து அதில் சுக்கிரன் சந்திரன் சனி அங்காரகனுகிய நால்வரும் நிற்கப் பிறந்தவர் மூடமாவர். அன்றியும் இலக்கினத்தில் சனியும் மூன்றுமிடம் அல்லது நான்காமிடத்தில் புதனுமிருக்கப் பிறந்தவர் குறளற்பராவர், எ - று. 59

## துற்பலன், விரலதிகன்.

அஞ்சொன்பதொன்றி லழகுபுந்திதானிருக்கத்
துஞ்சுமேதேகமெல்லாந் துற்பலமாய்—மிஞ்சவரும்
அஞ்சுவிரலுக்குமே லதிகவிரலுண்டாகுங்
கொஞ்சுகுழலணங்கே கூறு.

(இ - ள்.) ஜன்மலக்கினத்திலாவது ஐந்தாமிடத்திலாவது ஏழாமிடத்திலாவது ஒன்பதாமிடத்திலாவது புதனிருக்கப் பிறந்தவர் தன் தேகம் துற்பலப்பட்டு அசதியுள்ளவராவர் ஈதன்றி கை கால்களில் ஐந்து விரல்களுக்குமேல் அதிக விரல்களுண்டாய் ஜனிப்பர், எ-று. 60

6-வது பாவகம் முற்றிற்று.

---

7-வது பாவகம்.

## களத்திரஸ்தான பலன்.

### ஏககளத்திரம் புத்திசாலி.

தாரேசன்வாக்கேசன் றனிகேந்திரகோணத்தி
னேராயிருந்து நிலைமாற—சீராக
மித்திராய்க்கூடிடினு மேககளத்திரமாம்
புத்திதனிலதிகமதாய்ப் போற்று.

(இ - ள்.) இரண்டாமிடத்ததிபதியும் ஏழாமிடத்ததிபதியும் திரிகோண கேந்திரங்களில் மாறி நின்று மித்திரர்களாயிருக்கப் பிறந்தவர் நல்ல புத்தியுள்ள பெண்சாதியை மணஞ்செய்து வாழ்ந்திருந்து சம்பத்தை யனுபவிப்பர், எ - று. 61

### தாரம், நன்மை, தீமை.

ஏழோனிரவியதா யின்றவர்க்கமாயிடினும்
வாழ்மனையாள்பாவசிந்தை வாய்ந்தவளே—சூழ
தாரத்திற்சுக்கிரனுந் தானிருக்கவேயவளும்
பாரபுத்தியுள்ளவள்தான் பார்.

(இ - ள்.) ஏழாமிடத்ததிபதியானவன் சூரியனாயிருக்கப் பிறந்தவர் பாப சிந்தனையுள்ள மனைவியை மணஞ்செய்வர் அன்றியும் ஏழாமிடத்தில் சுக்கிரனிருக்கப் பிறந்தவர் நல்ல மேம்பாடுள்ள புத்தியையுடைய மனைவியை மணம்புரிந்து வாழ்ந்து சுகித்திருப்பர், எ - று. 62

## களத்திர பாக்கியஸ்திரீ.

ஏழில்மதியிருக்க யிரவிக்குப்பனிரெண்டில்
வாழுங்குருவிருக்க வந்திடினும்—சூழவே
பதினொன்றிலேகுருவும் பதியகளத்திரம்வெகுவாய்
அதிகமுதல்சேருமென் றறி.

(இ - ள்.) ஏழாமிடத்தில் சந்திரனிருக்க பதினொருமிடத்தில் அல்லது பனிரெண்டா மிடத்தில் குரு விருக்கப் பிறந்தவர் அநேக களத்திரங்களை மணம்புரிந்து சுக ஜீவியாய் சதா காலமும் வாழ்ந்திருந்து அளவிறந்த சந்தோஷத்தையும் இன்பத்தையு மனுபவிப்பர் எ - று. 63

## ஏககளத்திரம்.

தேய்ந்தமதியதுவுந் தீக்கோளுடன்கூடி
காய்ந்தேழிலேநிற்கக் கண்பார்க்க—ஆய்ந்தவரைப்
பாருமொழியணங்கே பண்புடையோர்க்காழ்ந்த
ஏககளத்திரமா யெண்.

(இ - ள்.) க்ஷீணச்சந்திரனோடு பாவ வர்க்கங்களாகிய கிரகங்கள் கூடி ஏழாமிடத்திலே நின்றிருந்தாலும் அல்லது பார்த்திருந்தாலும் அப்படியிருக்கப் பிறந்தவர் ஒரே களத்திரத்தை மணஞ்செய்து வாழ்ந் திருக்கையில் அவளால் சதா துக்க சாகரத்தில் மூழ்கி யிருப்பர், எ - று.

## பதிவிரதை ஏககளத்திரம்.

தாரேசன்வாக்கேசன் றன்னுடையவீட்டிருக்கப்
பாராமல்வேறொருவர் பதிந்திடவே—நேராகப்
பாகனையச்சொல்லிற் பதிவிரதையானதொரு
யேககளத்திரமா யெண்.

(இ - ள்.) இரண்டாமிடத் ததிபதியும் ஏழாமிடத் ததிபதியும் தங்கள் தங்கள் சுயக்ஷேத்திரங்களிலிருக்க அவர்களைப் பாவிகள் பாராம

விருக்கப் பிறந்தவர் பதிவிரதையான ஒரே களத்திரத்தை மணம்புரிந்து நல்ல இன்பத்தை யனுபவிப்பர், எ - று. 65

7-வது பாவகம் முற்றிற்று.

---

8-வது பாவகம்.

# ஆயுருஸ்தான பலன்.

## கயிற்றல் மரணம்.

**மகாகும்பமஷ்டமதாய் மதிபாவர்கூடிநிற்கிற்**
**சிகரமதிசனிகூடிச் சேர்ந்துநிற்க—சுகபாவர்**
**நிசமைந்திலிராகுவெட்டில் நிற்கச்சனிநான்கிற்**
**குசனேக்கக்கயிர்மாணங் கூர்.**

(இ - ள்.) மகாராசி அல்லது கும்பராசி எட்டாமிடமாயிருந்து அதில் சந்திரனேடு பாவிகள்கூடி ஜன்மராசியிலிருக்க அல்லது சனி சந்திரன் கூடியிருக்க ஐந்தாமிடத்தில் சுபபாவங்களும் எட்டாமிடத்தில் இராகுவும் நான்காமிடத்தில் சனியுமிருக்க அங்காரகன் பார்க்கப் பிறந்தவர் கயிற்றினல் மரண மடைவர், எ - று. 66

## பட்டுக்கயிற்றல் மரணம்.

**மகரகும்பநான்கிடமாம் வந்திருக்கும்தானத்திற்**
**சிகரமதிபாவருடன் சேர்ந்திருக்க—மகாகுப்ப**
**மெட்டாமிடமாகி விதிலிராகுவொன்றிருக்கிற்**
**பட்டுகயிற்றல்மரணம் பார்.**

(இ - ள்.) மகாராசி அல்லது கும்பராசி நான்காமிடமாயிருந்து அதிற் சந்திரனேடு பாவிகள் கூடியிருக்க அல்லது மகாராசி கும்பராசி எட்டாமிடமாகி அதில் இராகிருக்கப் பிறந்தவர் பட்டுக்கயிற்றல் தூக்கு மாட்டிக்கொண்டு உயிரை மாய்த்துக்கொள்ளுவர், எ - று. 67

## சேங்கயிற்றல் மரணம்.

மூன்றைந்துவொன்றுடையோர் முன்னிராகுகேதுகுரு
போன்றவஸ்தமானமது போயிடினுந்—தோன்றபத்திற்
றேய்மதியுமொன்பதனிற் சேயுமுயிர்காரிபத்திற்
சாயிரவிசெங்கயிற்றூற் சாம்.

(இ - ள்.) இலக்கினம் மூன்றுமிடம் ஐந்தாமிடத்திற் குரியோர்கள் குரு இராகு கேதுக்களுடனேகூடி அஸ்தமனமாயிடினும் பத்தாமிடத்தில் அமரபட்ச சந்திரனும் ஒன்பதாமிடத்தில் அங்காரகனும், இலக்கினத்தில் சனியும், பத்தாமிடத்தில் அஸ்தமன சூரியனுமிருக்கப் பிறந்தவர் சிவந்த நிறமுள்ள கயிற்றினுல் மரண மடைவர், எ - று. 68

## கல்லேறிவால் மரணம்.

எட்டுடையோன்கோணத் திருக்கரவிசேய்சனியு
மட்டமத்திலேநிற்க மாமயிலே—விட்டறியும்
கல்லெறிவாற்பட்டுக் கடுகவுயிர்போமென்று
வல்லமையாய்ச்சொன்ணுர் மனு.

(இ - ள்.) எட்டாமிடத்ததிபதியோன் திரிகோணஸ்தானத்திலிருக்க சூரியன் சனி செவ்வாய் மூவர்களும் எட்டாமிடத்திலிருக்கப் பிறந்தவர் கற்களினுல் அடிபட்டு பாதை பொறுக்கமாட்டாமல் மெலிந்து உயிரைவிடுவர், எ - று. 69

## ஸ்திரீகளால் தவறிவிழ மரணம்.

ஆறெட்டுமொன்று மதற்குடையோர் தன்னுடனே
தேறுவெள்ளிகாரியுடன் சேர்ந்திடினும்—சிறிட்ட
வாழ்ஸ்திரீகளால்மரண மறுபாவர்கூடினுமேல்
கீழ்தவறிவிழுமரணங் கேள்.

(இ - ள்.) இலக்கினுதிபதி ஆறுமிடத்ததிபதி எட்டாமிடத்ததிபதிகளாகிய மூவர்களுடன் சுக்கிரன் சனி கூடியிருக்கப் பிறந்தவர் ஸ்திரீகளால் மரணமடைவர். அன்றியும் பாவிகள் கூடியிருந்தால்

அந்தரத்திலிருந்து கீழே விழுந்து தற்செயலாய் சடுதியில் மரண மடைவர், எ - று. 70

## பசாசால் நீரில்விழ மரணம்.

**அபரமதிசேய்சனியு மதிலிராகுகேதுவுமே**
**விபரமுடன்கூடிவர மெல்ல—நபரதுவும்**
**பீடைப்பசாசு பிடித்துதுற்சலமவற்றில்**
**வாடிவிழுந்தேமடிகு வான்.**

(இ - ள்.) க்ஷீணமாகிய சந்திரனுடன் செவ்வாய் சனி இராகு கேதுக்களாகிய இந்நால்வருங் கூடியிருக்கப் பிறந்தவர் அடவில்லாத பீடையும் பசாசுகளும் பிடித்து தண்ணீரில் விழுந்து மரணமடைவர் அல்லது ஜன்னி முதலிய ஜலதோஷத்தினுல் வாதை பொறுக்காமல் நீரில் விழுந்து மரணமடைவர், எ - று. 71

## கர்ப்பத்தால் மரணம்.

**ஈராறிற்றேரவனு மீரிரண்டிற்றேய்மதியுஞ்**
**சீரானசெவ்வாயுஞ் சேர்ந்திடினும்—பேரான**
**மதிரவியும்பாவர் மத்தியினில்வந்திடிற்சாம்**
**அதிவிதத்தாய்கர்ப்பத்தி லாங்கு.**

(இ - ள்.) சூரியன் பனிரெண்டாமிடத்திலும் க்ஷீணச்சந்திரன் செவ்வாயாகிய இவ்விருவர்கள் நான்காமிடத்திலும் பாவிகள் மத்தியிலும் சூரியன் சந்திரனிருக்கப் பிறந்தவர் தாயினது கர்ப்பத்திலேயே மரணமடைவர் அல்லது இவன் தாயால் யாதுகாரணத்தினுலோ சிசுஹத்தி வதைசெய்வர், எ - று. 72

## மாமன், தாய் மரணம்.

**மாலவனுக்கைந்தில் மகாபாவர்தாமிருக்கிற்**
**சாலவளர்மாமன் றூன்மரணம்—நீலவிழி**
**புகர்பாவர்மத்தியினிற் பொன்காணுனுகிற்**
**பகர்கர்ப்பத்தாய்மரணம் பார்.**

(இ - ள்.) புதனுக்கு ஐந்தாமிடத்தில் பாவக்கிரகங்களிருக்கப் பிறந்தவர் அம்மானை அப்பொழுதே தடையின்றி கொல்லுவர் அல்லது அச் சுக்கிரனோடு பாவக்கிரகங்கள் மத்தியில் குரு பார்த்திராவிடின் அக் குழந்தை தாய் கர்ப்பத்தில்தானே கொல்லுவிக்கப்படுவர், எ - று. 73

## பிள்ளை, தாய் மரணம்.

சுக்கிரனுக்கைந்திற் சுடரோன்சனியிருக்கிற்
றிக்குமதிக்கொன்பதைந்திற் றீயசனி—யொக்கவே
நிசிபிறக்கிற்பிள்ளை நேரீன்றதாயிருவர்
வசிதவறுமரணமென்றே வை.

(இ - ள்.) சுக்கிரனுக்கு ஐந்தாமிடத்தில் சூரியனும் சனியுமிருக்க சந்திரனுக்கு ஒன்பதாமிடம் ஐந்தாமிடத்தில் சனியும் சுக்கிரனுமிருக்கப் பிறந்தவர் இரவிலுதிக்கில் ஆண்பிள்ளையானபோதிலும் அதில் அச் சிசுவும் அதைப் பெற்ற தாயும் முன்னும் பின்னுமாய் மரணமடைவர், எ - று. 74

## கர்ப்பத்துடன் மரணம்.

அஞ்சிற்குடையவனு மதிபலமாய்த்தானிருக்கக்
கொஞ்சொன்றுநான்கிற் குடையவனும்—தஞ்ச
மதியதுதுற்பலமாயின் மாதுருகர்ப்பத்துடனே
அதிவிதமாய்ச்சாவா ளறி.

(இ - ள்.) ஐந்தாமிடத்ததிபதியும் சந்திரனும் வலிவு பெற்றிருந்தாலும் அல்லது நான்காமிடத்ததிபதியும் இலக்கினதிபதியும் சந்திரனும் பலயீனமாயிருந்தாலும் தான் பிறவாததற்குமின் தன் தாயானவள் கர்ப்பத்துடனே மரணமாவாள் அப்பொழுது அச் சிசுவை சத்திரஞ்செய்தே யெடுப்பர், எ - று. 75

8-வது பாவகம் முற்றிற்று.

---

### 9-வது பாவகம்.

## பிதுருஸ்தான பலன்.

### தாய், தந்தை, சிசு மரணம்.

நன்னுதலாய்கேளாய் நான்கொன்பதிற்குடையோன்
றுன்னுபலமில்லாமற் றாற்பலமாய்—உன்னியே
பாவருமேகூடிடினும் பண்புடையோர்தாய்தந்தை
ஈவருமேமரணமென்றே யெண்.

(இ - ள்.) நான்காமிடத்ததிபதியும் ஒன்பதாமிடத்ததிபதியும் பலயீனமாயிருக்க இவர்களைப் பாவக்கிரகங்கள் கூடி அல்லது பார்க்கப் பிறந்தவர் தன் தாய் தந்தைகளை அக்கணமே கொல்லுவிப்பர் அது வீடிடின் மீண்டும் அச்சிசு தாய் தந்தையர் மூவர்களுமே ஏககாலத்தில் மாண்டிடுவர், எ - று. 76

### பாலியத்திற் பாக்கியன்.

வின்னுதலாய்கேளாய் வியத்துயிரிலாபத்
தின்னுசுபரிலக்கின திபனும்—தன்பலமாய்
கேந்திரிக்கவாலிபத்திற் கேட்டபொருளெய்துமென
வாய்ந்துரைத்ததாக வறி.

(இ - ள்.) இலக்கினம் பதினோருமிடம் பனிரெண்டா மிடங்களில் சுபக்கிரகங்களிருக்க இலக்கினதிபன் பலமாய் கேந்திரத்திலிருக்கப் பிறந்தவர் வாலிபத்தில்தானே தனக்குப் பொருள் கிடைத்து அதினால் தான் பலவந்தனாக விர்த்தியடைந்து சதா காலமும் வாழ்ந்திருப்பர், எ - று. 77

### மகா பாக்கியவான்.

உயிரதனிற்பாவருமா யுயிரோன்பலத்துநிற்கில்
தைரியமாய்சுபவர்க்கஞ் சராரசி—பயிரான
சலக்கிரகஞ்சுபர்கூடித் தாவிமதியேயிருக்க
இலக்கமிலாபாக்கியவா னேர்.

(இ - ள்.) இலக்கினத்திற் பாவக்கிரகங்களிருக்க இலக்கினுதிபன் வலுத்திருக்க அவருக்கு ஐந்தாமிடம் சாராசியாயிருக்க அச் சராசிக் குடையோரும் சலக்கிரகங்களில் சுபர்கள்கூடி சந்திரனேடிருக்கப் பிறந்தவர் எண்ணரிய திரவியங்களைச் சம்பாதித்து தன்னை யாவரும் பணிய வாழ்ந்திருப்பர், எ - று. 78

## நெடுங்கால பாக்கியவான்.

ஒன்றென்பதிற்குடையோ றென்றுகவேகூடி
யொன்றென்பதிலிருக்க வொண்டியுயிர்—ஒன்ருக
வேந்தனுமேபார்க்க மிக்கநெடுங்காலஞ்
சேர்ந்துவரும்பாக்கியவான் செப்பு.

(இ - ள்.) இலக்கினத்திற்கும் ஒன்பதா மிடத்திற்கு முடைய வர்கள் ஒன்றுகக்கூடி இலக்கினத்தில் அல்லது ஒன்பதா மிடத்தில் நிற்க இலக்கினுதிபதியோடு குருவானவர்கூடி அல்லது பார்க்கப் பிறந்த வர் நெடுநாள் செல்வமாய் வாழ்ந்திருப்பர், எ - று. 79

## பாலியத்திற் பொருட் சேர்ப்போன்.

உயிரிற்சுபரிருக்க வோங்கிரண்டோன்கேந்திரிக்க
உயிரோன்கொடிய ருடன்பலக்க—தைரியமாய்
வாலிபத்தில்வேணபொருள் வந்துதவுமென்றுரைத்தார்
மேலுமிகப்பெரியோர் விரித்து.

(இ - ள்.) இலக்கினத்தில் சுபக்கிரகங்களிருக்க அதற்கு இரண்டா மிடத்ததிபதி கேந்திரத்திலிருக்க இலக்கினுதிபதி பாவிகளுடன் சேர்ந்து வலுத்திருக்கப் பிறந்தவர் வாலிபத்தில் தனக்கு அனேக பொருள் கைக்குக்கிட்டி வாழ்வர், எ - று. 80

9-வது பாவகம் முற்றிற்று.

## கருமஸ்தான பலன்.

### குளம், கோயில், சோலே, சமைப்போன்.

பத்திற்குடையோன் பாக்கியாதிபருஞ்சுபரு
மொத்துமிகப்பார்க்க வுடன்கூட—யெத்திசையுங்
கூவங்குளங்கோயிற் கோபுரமுஞ்சோலே
பாவகமாய்ச்செய்வான் பரிந்து.

(இ - ள்.) பத்தாமிடத்ததிபதி ஒன்பதாமிடத் ததிபதியாகிய இருவர்களுடன் சுபக்கிருகங்கள் கூடியிருக்க அல்லது பார்த்து நிற்கப் பிறந்தவர் கோயில், குளம், கோபுரம், நடைவாவி, நந்தவன முதலியவைகள் நூதன பிரதிஷ்டைகள் செய்து விருத்தியடைய விளங்குவர், எ - று. 81

### பாவலன்·

வாகனத்தோன்கருமேசன் வளருமுயிரோன்கூடி
பாகமுற்றுநிற்கப் பதிக்குடையோன்—வேகமுற்று
மாபலமாய்நிற்க மகிழ்குருவுந்தான்பார்க்கப்
பாவலனுவானே பரிந்து.

(இ - ள்.) நான்காமிடத் ததிபதியும் பத்தாமிடத் ததிபதியும் இலக்கினுதிபதியைக் கூடியிருக்க அந்த ஸ்தானதிபதி வலுத்திருக்க அவனைக் குருபார்க்கப் பிறந்தவர் நல்ல பரிசுத்தமான வித்துவானுய் இலக்கிய விலக்கண பிரசங்க நிபுணராவர், எ - று. 82

### மைந்தர் காலி.

ஆறெட்டிற்குடையவனே யணிராகுகேதுசனி
மீறிட்டுக்கூடி வியந்துநிற்க—தூறிட்ட
மைந்தனுமேகாலி வரும்பாரினிற்பெரியோர்
தந்திரமாய்ச்சொல்வர் தழைத்து.

(இ - ள்.) ஆறுமிடத் ததிபதியையாவது அல்லது எட்டாமிடத் ததிபதியையாவது இராகு, கேது, சனியாகிய இம்மூவர்கள்கூடி நிற்கப் பிறந்தவர் தனக்குப் பிள்ளைகளில்லாமல் தன்னந்தனியனாய் நின்று எத்தேச காலமும் துக்க சாகரத்தில் மூழ்கித் துன்பத்தை யடைந்து சஞ்சலப்படுவர், எ - று. 83

## கோச மறுந்திறப்போன்.

**இருமூன் றீரா றவனை யிராகுபுதன்கூடிப்**
**பரிவாகச்செவ்வாயும் பார்க்கப்—பெரிதான**
**தன்னுடையகோசத்தைத் தானேயறுத்திடுவன்**
**தின்னுடையோர்சொன்னார் தெரிந்து.**

(இ - ள்.) ஆறுமிடத் ததிபதியை அல்லது பனிரெண்டாமிடத் ததிபதியை இராகுவும் புதனுங் கூடியிருக்க இவர்களைச் செவ்வாய்ப் பார்க்கப் பிறந்தவர் தனது கோசத்தைத் தானே யறுத்துக்கொண்டு உயிர் விடுவர் அதாவது தனது கோசத்தைத் தன்னால் அல்லது பிறரால் அறுப்புண்டிறப்பர், எ - று. 84

## இலிங்கவாக்கினை.

**ஆறுக்குடையவனை யணிராகுமால்கூடித்**
**தேறுங்கருமேசன் சேர்ந்துநிற்க—வீறுடைய**
**செவ்வாயேபார்க்கச் சேர்ந்தலிங்கவாக்கினையா**
**மிவ்வாறேயெய்திடுமென் றெண்.**

(இ - ள்.) ஆறுமிடத்ததிபதியை இராகுவும் புதனும் பத்தாமிடத் ததிபனும் சேர்ந்திருக்க இவர்களைச் செவ்வாய் பாராதிருக்கப் பிறந்தவர் தனது இலிங்கத்தைத தானே யறுத்துக்கொண்டு உயிர் விடுவர் அதாவது தனது இலிங்கத்தைத் தன்னாலோ அல்லது பிறராலோ அறுப்புண் டுயிர்விடுவர், எ - று. 85

## கைகால்களாக்கினை.

**நாமமுயிர்காரியேழ் நான்காகநின்றிடினும்**
**வாமமிகுகன்னிபுகர் வந்திடினும்—ஆமெனவே**

**அபாமதியிற்பிறக்க யணிகால்கையாக்கினையாம்**
**விபரமுடன்சொன்னார் விரித்து.**

(இ-ள்.) இலக்கினதிபதியும் சனியும் நான்காமிடத்தில் ஏழா மிடத்திலிருக்க கன்னியாராசியில் சுக்கிரனிருக்க அவனுடன் க்ஷீணச் சந்திரனுங் கூடியிருக்கப் பிறந்தவர் கைகால்கள் தறிப்படுவர் அதாவது கைகால்கள் குட்டத்தினாலோ அல்லது வெட்டுப்பட்டதினாலோ உயிர் விடுவர், எ-று. 86

### உடல்றுப்பாலிறப்போன்.

**நண்டில்மதிராகு ரவிநான்காமிடஞ்சேரிற்**
**பண்டுமுயிர்தன்னிற் பானுமகன்—நின்றிடினும்**
**ஆயுதத்தினாலுடலை யறுபடுவாரென்றுலகில்**
**வேயுமிகத்தோழி விளம்பு.**

(இ-ள்.) கடகராசியில் சந்திரனும் இராகுவும் நான்காமிடத்தில் சூரியனும் இலக்கினத்தில் அங்காரகனுமிருக்கப் பிறந்தவர் தன்னுடலை ஆயுதத்தினால் அறுப்புண்டுயிர்விடுவர் அதாவது அகஸ்மாத்தாய் தன்னால் அறுபட்டோ அல்லது மற்றொருவரால் வெட்டுப்பட்டோ யிறப்பர், எ-று. 87

### கண் மூக்குக ளாக்கினை.

**வாக்கேசன்வாக்கில் வரப்பருதிவர்க்கமதாய்**
**நீக்காருஞ்சேய்பார்க்க நேரிழையே—தீர்க்கமுடன்**
**கருமேசனுங்கூடிற் கண்மூக்குகளாக்கினையாய்த்**
**தருமருக்குச்சொன்ன சதுர்.**

(இ-ள்.) இரண்டாமிடத்திற்குடையோன் இரண்டாமிடத்தி லிருந்து சூரியவர்க்கமாக அங்காரகன் பார்க்கவும் அவனைப் பத்திற் குடையோன் கூடியிருக்கப் பிறந்தவர் தனது கண் மூக்குகள் அறுப் புண்டுயிர்விடுவர் அதாவது யாது காரணத்தினாலோ தனது கண் மூக்கு களை அறுப்பதினா லிறப்பர், எ-று. 88

## சிறையிருப்புள்ளவன்.

**சாமியுடனாறுடையோன் றபனன்மகனுங்கூடி**
**ஓமெனவேயொன்றைந்தி லொன்பதினும்—நேமமிகு**
**கேந்திரத்தினிலிருக்கக் கேள்நிர்ப்பந்தம்வருமென்**
**றுய்ந்துரைத்தேன் றருமர்க்கே யான்.**

(இ - ள்.) குருவுடனே ஆறாமிடத்திற்குடையவனும் சனியுங் கூடி இலக்கினத்தில் ஐந்தாமிடத்தில் ஒன்பதாமிடத்தில் கேந்திரமேறி நிற்கப் பிறந்தவர் சிறையிருப்புத் தெண்டனையைப் பெறுவர் அதாவது இராஜ தெண்டனைக்குட்பட்டு அதனால் அவமானமும் பொருட்சேதமு மடைவர், எ - று. 89

## சிரசாக்கினை.

**இருநான்குடையோனை யேறவெள்ளிப்பார்க்கில்**
**ஒருங்குசனிசேயிராகு வொன்றிற்—றிரிந்திடினும்**
**பாவாங்கிஸத்திற் பண்புடனே தாமிருக்கத்**
**தாவுதலையாக்கினையாந் தான்.**

(இ - ள்.) எட்டாமிடத்ததிபதியை ரிஷபராசியிலிருக்கும் சுக்கிரன் பார்க்கவும் அங்காரகன் சனி இராகுவாகிய இம் மூவர்களும் ஒன்றாய்க்கூடி பாவாங்கிசத்திலிருக்கப் பிறந்தவர் தனது புத்தி சபலத்தினால் இராஜ விரோதியாய் சடுதியில் சிரசாக்கினையை யடைவர், எ - று.

## வெட்டுண்டு புழுபுழுப்பவன்.

**கதிரவனுமேயிரண்டிற் கருமத்திற்சேய்திங்கள்**
**பதியுடையபாவருடன் பார்க்கிற்—றுதியுடனே**
**வெட்டுண்டுவாயில் விழும்புழுவினால்மரணம்**
**கட்டுண்டாய்ச்சொன்ன கவல்.**

(இ - ள்.) இரண்டாமிடத்தில் சூரியனும் பத்தாமிடத்தில் அங்காரகனும் சந்திரனுமிருக்க அவர்களைப் பாவிகள் பார்க்கப் பிறந்தவர் சத்துருக்களால் வெட்டுப்பட்டு தன் வாயிற் புழுபுழுத்து மரண

மடைவர் அல்லது வெட்டுப்பட்ட காயத்தினலாவது புழுபுழுத்து மடிந்திடுவர், எ - று. 91

### திரவியநாசன்.

வாக்கேசன்பாவியதாய் வாழ்பருதியுங்கூட
ஊக்கமதாயாறெட்டி லுண்மையதாய்—தேக்கமுடன்
நின்றூற்றிரவியமும் நிருபர்முனிவரால்மரணங்
குன்றுமூலமாதே குறி.

(இ - ள்.) வாக்குஸ்தானுதிபதி பாவியாயிருந்து சூரியனுடன் கூடி ஆறுமிடத்திலாவது எட்டாமிடத்திலாவது அல்லது பத்தாமிடத்திலாவ திருக்கப் பிறந்தவர் தனது திரவியங்களெல்லாம் இராஜாங்கத்தின் விஷயமாய்ச் செலவழித்து யாவும் நஷ்டப்படுவர், எ - று. 92

### 10-வது பாவகம் முற்றிற்று.

---

## 11-வது பாவகம்.

# இலாபஸ்தான பலன்.

### பலவிதத்திலாபன்.

பண்டிரவிரெண்டிருக்கிற் பலவிதமாயிலாபம்வருங்
கண்டுபதினென்றிரவி காணுங்கால்—அண்டிமிக
அரசர்களாலிலாப மழகுமதியேழிருக்கிற்
றிரகளத்திரத்தாலாபந் தினம்.

(இ - ள்.) சூரியன் இரண்டாமிடத்திலிருக்கப் பிறந்தவர் பல விதத்தினுலும் இலாபத்தையடைவர். பதினேருமிடத்திலிருக்கப் பிறந்தவர் அரசர்களால் இலாபத்தைச் சம்பாதிப்பர். சுபசந்திரன் ஏழாமிடத்திலிருக்கப் பிறந்தவர் தன் களத்திரத்தினல் அதிக லாபத்தை யடைவர், எ - று. 93

### தனலாப நஷ்டன்.

சுராறிற்சுபர்க ளிருக்கவதற்குடையோன்
சாராமற்றுற்பலத்திற் றனலாபம்—பேரான
லாபத்திற்சாமியுரி னன்மைதரும்பாக்கியமும்
பாபத்தைநீக்கிவரும் பார்.

(இ - ள்.) பனிரெண்டாமிடத்தில் சுபக்கிரகங்களிருக்க அவ் வீட்டிற்குடையவன் துற்பலனுயிருக்கப் பிறந்தவர் மிகுந்த தனலாபத்தை யடைவர். பதினேராமிடத்தில் குருவிருக்க நன்மார்க்கத்தில் வேண்டிய பொருள் தனக்குக் கிடைத்து சுகசீவியாய் வாழ்ந்திருப்பர், எ - று.

### இராஜதேண்டனை.

சுட்டோனிற்கைந்திரண்டேழ் சூழ்பாவர்நின்றிடினும்
விட்மானராஜதெண்ட மேவிடுமே—திடமான
வாக்கோன்பலயீன மானுலுமிராஜதெண்டம்
ஊக்கமுடன்கேளு மூவந்து.

(இ - ள்.) சூரியனுக்கு இரண்டாமிடத்தில் ஐந்தாமிடத்தில் ஏழாமிடத்தில் பாவிகளிருக்கப் பிறந்தவர் கொடுமையான இராஜ தண்டனைக்குட்படுவர். இரண்டாமிடத்திற்குடையவன் பலயீனமாயிருக்க இராஜதெண்டனையை யடைவர், எ - று. 95

### இராஜவாக்கினை.

லாபேசனஸ்தமிக்க நன்னவருநீச்சமதால்
தாபவியமெட்டாறிற் சார்ந்திடினும்—சோபமுடன்
நற்சுபரும்பாராது நாட்டிடினுமிராஜதெண்டம்
தற்சுபமாய்ச்சொன்ன தறி.

(இ - ள்.) இலாபாதிபதியானவன் அஸ்தமித்து நீச்சமாய் ஆறுமிடத்தில் எட்டாமிடத்தில் சுபர்கள் பாராதிருக்கப் பிறந்தவர் இராஜ தெண்டனையை யனுபவிப்பதோடு தானும் இம்சையிலுழன்று மனவியாக்கூலத்தினுற் சஞ்சலப்பட்டு துக்கத்தை யனுபவிப்பர், எ - று. 96

### தரித்திரன்.

ஆரணங்கேகேளா யட்டமத்தோன்பதினொன்றிற்
காரணமாய்வந்து கலந்துநிற்க—சீரணங்கே
தேங்காதுநின்றாலுந் தினமுந்தரித்திரமாம்
ஆங்குரைத்தேனெவர்க்கு மாம்.

(இ - ள்.) எட்டிற்குரியவன் பதினோருமிடத்திலிருந்தாலும் அல்லது பதினோருமிடத் ததிபதியைக் கூடியிருந்தாலும் அதிற் பிறந்தவர் சதாகாலமும் நித்திய தரித்திரத்தையடைந்து துக்காக்கிராந்தனாய் யாவற்றினும் இலாபங் கிட்டாமல் கஷ்டமே யனுபவிப்பர், எ - று. 97

11-வது பாவகம் முற்றிற்று.

---

## 12-வது பாவகம்.

## விரையஸ்தான பலன்.

### பொருட்சேதம்.

நாலிற்குடையோ னற்சேய்சனிகுளிகன்
மேலோர்பார்க்கக்கூடி மேவிடினுஞ்—சால
சேர்த்ததிரள்வாகனத்தாற் செங்கன்றின்காலினாற்
சூத்திரத்தாற்பொருட்செலவாஞ் சொல்.

(இ - ள்.) நான்காமிடத்ததிபதியை அங்காரகன் சனி னாகிய மூவர்கள் பார்க்க அல்லது கூடியிருக்கப் பிறந்தவர் வா னாலும் மிருகத்தினாலும் கன்று காலிகளாலும் பொருட் அல்லும் பகலும் அலேச்சல் திரிச்சலாலேயே மதியின்மையா னழிவர், எ - று.

### சர்வ பொருட் சேதம்.

கேந்திரங்களன்கிற் கிளர்பாவர்நின்றிடினுஞ்
சார்ந்தவெகுதனமுந் தான்செலவாங்—கூர்ந்திரவி

**நீசமாயாறெட்டி னின்றிடினுந்தான்செலவாங்**
**காசுபொருளுள்ளதெலாங் காண்.**

(இ - ள்.) நான்கு கேந்திரங்களில் பாபக் கிரகங்களிருந்தாலும் அல்லது சூரியன் நீச்சமாக ஆறுமிடத்தில் எட்டாமிடத்தில் நிற்கப் பிறந்தவர் தன் பொருளெல்லாஞ் செலவழித்து யாதினும் நஷ்டப்பட்டு நயவஞ்சகர் பேச்சை நம்பி எந்நாளுந் துன்பத்தையே இன்பமா யனுபவிப்பர், எ - று. 99

## வீட்டிற் பல் சாவு.

**பனிரெண்டிற்குடையோன் பாவவர்க்கந்தானுகிற்**
**றனினின்றபாவருமே சார்ந்திடினும்—முனிந்துற்ற**
**அட்டமத்தோனென்பதுரி லவர்வீட்டிற்றுன்சாவர்**
**கட்டுபொருட்சேதம்வருங் காண்.**

(இ - ள்.) பனிரெண்டாமிடற்திற் குடையவர் பாவ வர்க்கமாக அவரைப் பாவிகள் கூடியிருக்க எட்டாமிடத்திற் குடையவர் ஒன்பதாமிடத்திலிருக்கப் பிறந்தவர் தனது வீட்டில் அதிக சாவும் பல விஷயங்களிற் பொருட் செலவும் சத்துருக்களாற் பகையும் தேக பீடையும் சம்பவித்துழல்வர், எ - று. 100

## இராஜதேண்டனையாற் சேலவு.

**முன்னுன்கிலேகுருவு மோகமுடனேயிருக்க**
**மன்னர்களாற்றெண்டமிக வந்திடுமே—பின்னுமொரு**
**அட்டமத்தோனென்பதனி லாண்மையுடனிருக்கக்**
**கட்டுமனைராஜதெண்டங் காண்.**

(இ - ள்.) பனிரெண்டா மிடத்திற் குரு விருக்கப் பிறந்தவர் இராஜதண்டனைக் குட்படுவர். எட்டாமிடத்ததிபதி ஒன்பதாமிடத்திலிருக்கத் தான் இராஜ தண்டனையை அனுபவிப்பதுடன் தன் வீடு மனையை யழித்து பாரியாய் நாடோறும் துன்மார்க்க சகவாசத்தில் சங்கடப்பட்டுழல்வர், எ - று. 101

### 5-வயதில் தாய் மரணம்.

மூன்றுமதிபதியு முன்னேசனியுடனே
தோன்றியைந்தாமிடத்திற் சூழிடினும்—ஆன்றிரவி
ஆறைந்துநான்கிடத்து மவன்றாயுமன்றேபோங்
கூறைந்தாமாண்டிற் குறி.

(இ - ள்.) மூன்றாமிடத்ததிபதி சனியுடன் சேர்ந்து ஐந்தாமிடத்தி லிருக்க சூரியன் நான்காமிடம் ஐந்தாமிடம் ஆறாமிடத்திலிருக்கப் பிறந்தவர் தனக்கு ஐந்து வயதில் தாய் மரண மடைந்து தான் மற்ற பந்துக்களிடத்தில் வளர்ந்து அவர்களையும் வஞ்சித்து தன்னந்தனிய னாய்த் திரிவர், எ - று. 102.

### 12-வது பாவகம் முற்றிற்று.

---

# மாரகயோக நிதான பலன்.

இச் செய்யு ளுரைகள் 2-ம்.

### செ. சி. தேவேந்திர நாத பண்டிதரவர்களால்

நூதனமா யியற்றியவை.

### உச்ச பலா பலன்.

இரவிக்குமுன்னுச்ச மேதிருக்கினற்பலனும்
இரவிக்குப்பின்னுச்ச மேற்காவாம்—இரவிக்கு
முன்பின்சுபரிருக்க முழுதும்பலன்றருவர்
பின்முன்னசுபருரிற் பேய்.

(இ - ள்.) சூரியனுக்கு முன்னுள்ள இராசிகளின் உச்சக்கிரகங்கள் யாவும் நற்பலன்களைக் கொடுப்பர். சூரியனுக்குப் பின்னுள்ள உச்சக் கிரகங்க ளொன்றேனும் யாதொரு பலனையு மளிக்காதென்றறிக. ஷை சூரியனுக்கு முன்னும் பின்னும் சுபக்கிரகங்களிருக்கப் பிறந்தவர்

எத்தேச காலமும் அதிக நற்பலனைத் தருவர். ஈதன்றி சூரியனுக்கு முன்பின் பாவக்கிரகங்களிருக்கப் பிறந்தவர் எந்நாளும் பேய்போ லலைந்து திரிவர், எ - று. 103

## மாரகதிசா பலன்.

இரண்டேழிலக்கினத்திற் கிரண்டேழதிபதிக்கு
இரண்டேழிலிந்துவினிற் கிரண்டேழா—முரண்டசனிக்
கேததிகமானுலு மெண்ணிக்குறிப்பறிந்து
ஓதனை மாரகமா யுள்.

(இ - ள்.) இலக்கினத்திற்கு 2, 7-ஆமிடமும், இலக்கினுதிபதிக்கு 2, 7-ஆமிடமும், சந்திரனுக்கு 2, 7-ஆமிடமும், சனிக்கு 2, 7-ஆமிடமு மிருக்குங் கிரகங்களை வரிசைக்கிரமமாய் வரைந்து பார்க்க எக்கிரகத் துகை அதிகமா யிருக்கிறதோ அக்கிரகத் திசையில் அவர்கட்கு மாரக மென்றறிக, எ - று. 104

## மாரக கோட்கள்.

இலக்கினத்திற்காமிரண்டேழ் மாரகமாமென்று
மலைக்குமிரண்டான்கொல்லா னல்லா—விலக்கினத்திற்
றோன்றுமந்தப்பாவிகளுன் காயதனிற்சொல்லுகின்ற
மூன்றெட்டுமாரகமாய் மூட்டு.

(இ - ள்.) இலக்கினத்திற்கு 2-ஆமிடம், 7-ஆமிடம் மாரகமென் பதில் இரண்டாமிடத்தோன் கொல்லுவதரிதாயினும் அவ்விலக்கினத் தைப் பார்க்கும் பாவிகள் நால்வரில் மூன்றுமிடத்தோனும் எட்டாமிடத் தோனும் மாரகக்கிரகங்களாதலால் அவர்கள் தப்பாமற் கொல்லுவர், எ - று. 105

## மாரக திரிகோண மாதம்.

பன்னுமட்டமாதி பதியிருந்தராசிக்கு
மன்னுந்திரிகோண மாதமாம்—துன்னுமந்த
மாதத்திலேமரண மாந்தரிடவயதைச்
சோதித்துச்சொல்வாய் துணிந்து.

(இ-ள்.) அஷ்டமாதிபதியிருந்த இராசிக்குத் திரிகோண ராசிகளாகிய மாதங்களிற் பிறந்தவர் அம்மாதத்திற்ருனே மரணமடைவர் அதாவது வாழ்நாட்கள் முற்றுங்கழிந்து முடிவில் அம்மாதக்கிரமமே மாரகத்திசையை ஒவ்வொருவரும் அடைவர், எ-று. 106

## பாக்கிய சுபர்கள்.

அஞ்சொன்பதிற்கதிபர் பாவர்சுபராளுலும்
மிஞ்சுபலனைத்தருவர் யேன்மூன்ரு—றெஞ்சுபதி
ஞென்றிற்கதிபதியு மிப்படியேயொன்றிவரிற்
பொன்றசுபமேகொடுப்பர் பூண்டு.

(இ-ள்.) ஐந்தாமிடத்ததிபதியும் ஒன்பதாமிடத்ததிபதியும் பாவர்கள் அல்லது சுபர்களாயிருக்கப் பிறந்தவர் நற்பலன்களை யடைவர் அல்லது மூன்ரூமிடத்ததிபதி ஆரூமிடத்ததிபதி பதிஞேரூமிடத்ததிபதிகளாகிய விவர்கள் முன்போல பாவர் சுபர்களர்க யிருந்தாலும் நற்சுபபாக்கியமே யளிப்பர், எ-று. 107

## யோககாரகர்கள்.

சொல்திரிகோணதிபருஞ் சேர்ந்தகண்டத்தாதிபருங்
கொல்கேதிராகுவுடன் கூடில்—வல்பிலமாய்க்
கூடின்வரும்பாம்புங் கொல்யோகக்காரகராய்
நாடியிதைச்சொல்வாய் நயந்து.

(இ-ள்.) திரிகோணஸ்தாளுதிபரும், கண்டஸ்தாளுதிபரும் இராகு கேதுக்களுடன் கூடி பலமாயிருக்கப் பிறந்தவர் முன் கூடினவர்களும் இராகு கேதுவமே மாரகயோகக்காரர்களாவர் அதாவது அவரவர் திசா புக்தி அந்தரவிதிப்படி வகுத்து காரகர்களுடைய மாரகத்திசையைச் சொல்லவும், எ-று. 108

## யோகதிசைகள்.

ஏற்றதிசைநாதனுக்கு மேந்துபுக்திகாரனுக்குந்
தோற்றமூன்ருறெட்டுத் தொல்பதிஞென்—ரூர்த்ததிபர்

**சம்பந்தமில்லையெனிற் றுமிருவோரும்பலன்கள்**
**செம்பொன்னளிப்பாரே சிறந்து.**

(இ - ள்.) திசாநாதனுக்கும் புக்திநாதனுக்கும் மூன்றுமிடத்ததிபதி ஆறுமிடத்ததிபதி எட்டாமிடத்ததிபதி பதினோருமிடத்ததிபதிகள் அவ்விருவரையும் பாராதிருக்கப் பிறந்தவர் முற்கூறிய திசாபுக்திநாதர் காலங்களில் அவரவர் நற்பலன்களைக் கொடுப்பர். பிற்கூறிய நான்கு ஸ்தானாதிபதிகளும் பார்ப்பாராயின் விசேஷ நற்பலனையே யடைவர், எ-று. 109

நீச்சத்திசைகள்.

**திசைநாதன்பாவியாய்ச் சேர்ந்தபுக்திநாத**
**னைசையோகக்காரகரா நண்ணி—நிசமா**
**யிராசயோகங்க ணல்கியரிட்டங்கூடத்**
**தராசுநிறைபோலளிப்பார் தான்.**

(இ - ள்.) திசாநாதன் பாவியாயிருந்து அவனைச் சார்ந்த புக்திநாதன் உச்சயோகக்காரகனாயிருக்கப் பிறந்தவர் நல்ல இராஜயோகத்தை யடைவர். அன்றியும் அடையும் யோகத்திற்குத் தக்கபடி அரிட்டங்களையும் அளிக்கத் தானிரண்டினுமுள்ள சுகதுக்கங்களையும் அனுபவிப்பவராவர், எ - று. 110

சோதிடநாடி 110 - ம்

முற்றுப்பெற்றது.

---

திருமகள் விலாச அச்சு நிலையம், சென்னை:—1941.

## அனுபோக ஜாதக ரகசியம் விலை ரூ. 1

கிரகசார சக்கரத்துடன் கூடிய இந்த ஜாதக ரகசியத்தை ஜோசியர்களும் சாதாரணமானவர்களும் சுலபமாக தெரிந்து கொள்ளுதற்காக, ஜாதகம் கணிக்கவும், ராசி கணிக்கவும், அஷ்டவர்க்கம் கணிக்கவும், கோசாரம், பன்னிரு பலாபலன்களும், திசாபுத்தி அந்தர பலன்களும் கண்ணாடிபோல் விளக்கி எழுதி யிருக்கிறது. இந்த ஒரு புத்தகமே ஜோதிடத்திற்குப் போதுமானது.

சக்தி தாஸன் எழுதிய

## அனுபவ ஹஸ்த ரேகை சாஸ்திரம் விலை ரூ. 2

[ஆயிரக்கணக்கானவர்கள் இதனை வாங்கி வாசித்து அனுபவத்துடன் திருப்தி யடைந்திருப்பதென்றால் இதைவிட வேறு அத்தாக்ஷியும் வேண்டுமோ? நூற்றுக்கணக்கான படங்கள் கூடியது]




விளக்கமான அநேகப் படங்கள் அடங்கிய இச் செந்தமிழ் வசன நூலறிவினால் ஆயுள், விவாகலாபம், குணம், பக்தி, அதிர்ஷ்டம், சந்தானம், அறிவு, சிற்றின்பம், வியாஜ்ஜியம், சக்தி, ஐசுவரியம், கண்டம், ஜயம், வியாதி, அபாயம், வஞ்சகம், பேரின்பம், காரிய சித்தி, சௌக்கியம், தயை, அஜீரணம், இல்லற சுகம், மரணம் முதலிய விஷயங்களைச் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். அன்றியும் இது விதியின் பலனையும், வாழ்க்கையின் இரகசியங்களையும், இன்னம் அநேக மர்மங்களையும் வெளிப்படுத்துகிற திறவுகோலாக இருக்கிறது. முக்கால வரலாறுகளையும் அறிய இவ்வனுபவ நூல் துணையாகும். உங்கள் கையிலுள்ள ரேகைப் பமன்களைச் சுலபமாய் நீங்களே தெரிந்து கொள்ளலாம்.

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

நெ. 41, வெங்கடாமய்யர் தெ, ஜி. டி. சென்னை.

## நஷ்ட ஜாதகக் கணிதம் விலை அ...

வடநூலினின்றும் மொழி பெயர்க்கப்பட்டது. எல்லோரும் எளிதில் தெரிந்து கொள்ளும்படி கணித விஷயங்கள் கூறப்பட்டிருக்கிறது. ஒரு முறை இந்நூலைப் படிக்க, நீங்கள் உங்கள் பலனைத் தெரிந்து கொள்வதோடு பிறருக்கும் பலன் சொல்லுவீர்கள்.

சோதிட பரல்களும், அஷ்டவர்க்கம் கணிக்கும் வகையும், ராகு கேது அஷ்டவர்க்கமும், இவைகளின் பலாபலன்களும், 1-முதல் 12-வரையுள்ள பாவ பலன்களும் கூறப்பட்டிருக்கின்றன. இராமதேவர் அஷ்டவர்க்கமும், புலிப்பாணி முனிவர் ஆரூடமும், திக்கு, மாதம், கண்டத்திரையம் முதலிய பலன்களும் உரைக்கப்பட்டிருக்கின்றன. மற்றும் களவுபோன பொருள்களையும், காணுமற்போன பொருள்களையும், இதில் கூறியுள்ள முறைகளால் வெகு எளிதில் நீங்கள் தெரிந்துகொள்ளவும் பிறருக்குச் சொல்லவும் கூடும். மற்றும் இழந்த பொருளை எந்தத் திக்கி லடையலா மென்பதும் விளங்கும். இந்நூலை நீங்கள் வாங்கிப் படித்த பின்னரே உணர்ந்து சோதிடப் பெருமையை வியப்பீர்கள். இன்றே ஒரு பிரதிக்கு எழுதுங்கள்.

## சோதிட அரிச்சுவடி விலை ரூ. 1

### 4-பாகங்களும் சேர்ந்த ஒரே கட்டிடம்

ஒருவருதவியு மில்லாமல் சோதிடத்தை நீங்களே சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். ஜாதகங்கள் ஸ்புடமும் செய்யலாம். சோதிட சாத்திரத்திலுள்ள எல்லாவிதக் கலை நுட்பங்களையும் தெரிந்துகொள்ளலாம். எல்லோரும் தெரிந்து கொள்ளும்படிச் சுலபமான நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

## மலையாள மாந்திரீக போதினி விலை அணு 4

இதில் கணபதி மூலமந்திரம், அஷ்ட கணபதி மூலமந்திரம், பிரமருத்திரன், சதாசிவன் முதலியோரின் மந்திரம், அஷ்டமா சித்துக்கள், அஷ்டத்திற்கு மந்திரம், சர்வ சங்கரா விஞ்சை, பஞ்சாக்ஷர தியானம், சுப்பிரமணியர் தியானம், முதலிய அநேக மந்திரங்கள் அடங்கியுள்ளன.

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

நெ. 41, வெங்கடாமய்யர் தெரு, ஜி. டி. சென்னை.

ஜெயம்

... தீர்பார்த்திருந்த சிறந்த சோதிட நூல்

... வெளிவந்து விட்டது!

ஜோஸ்யர் S. வெங்கடசுப்... மன்னார்குடி.

சுகர் நாடி என்னும்

# ஜோதிடசிகாமணி

விலை ரூ. 4

[இந்நூலை இயற்றியவர்: திரிசிரபுரம், பீமநகரம், சோதிட சித்தாந்தி கா. இராமசாமிப்பிள்ளை யவர்கள்

இந்நூல் சுமார் 28-வருஷங்களுக்கு முன் அச்சிட்டு வெளியாகியிருந்தது பலருமறிந்ததே. இந்நூலின் சிறப்பை கண்டு பல சோதிடர்களும், மற்றுமுள்ளோரும் வாங்கி வாசித்து பெரும் பயனடைந்ததால் வெகு சீக்கிரத்தில் இப்புத்தகம் செலவழிந்து விட்டது. இது பெரிய கிரந்தமாகையால் உடனே பதிப்பிட இதுகாலபரியந்தம் சௌகரியப்படாம லிருந்தது. பல நாள்களாக அநேகருடைய வேண்டுகோளுக்கிணங்கியும், சோதிட நூல்களில் இது மிகச்சிறந்ததாயும், இந்நூலினால் தத்தம் ஜாதகம் முதலியவைகளை பிறருதவியின்றி சகல பேர்களும் தங்களுக்குத் தாங்களே தெரிந்து கொள்ளும்படியான சிறந்த கிரந்தமாக இருப்பதாலும் இதற்காக விசேஷ பணச் செலவு செய்து புதிதாக இப்போதே மூன்றும் பதிப்பு வெளியிட் டிருக்கிறோம்.

இந்நூலில் சுமார் 1500-ஜாதகனுடைய லக்கினத்திற்கு உதாரணமாக பாடல்களும், பாடல்களுக்கிணங்க ஒவ்வொரு இராசிக்கும் சக்கரங்கள் அமைத்து மொத்தம் 1500-சக்காங்க ளமைக்கப்பட்டிருப்பதால், இதன் சிறப்பை விசேஷமாகக் கூறுவதற்கு அவசியமில்லை யாதலால், இதன் நன்மையை இந்நூலை வாங்கி வாசிப்பவர்களே கண்டு தெளிவார்க ளென்பது முற்றிலும் உண்மை.

B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,

நெ. 41, வெங்கடாராமய்யர் தெரு, ஜி. டி. சென்னை.